விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 25 ஞாயிற்றுக்கிழமை (07.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 50

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## சி.சு.கட்சியில் மட்டு.மேயர்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவகீதா பிரபாகரன் தொடர்ந்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

முன்னர் அங்கம் வகித்து வந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்ளும் திட்டமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலில் இணையுமாறு கூட்டமைப்புக்கு அரசு அழைப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் தம்முடன் இணைந்து போட்டியிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆளும் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின்போது ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்ததன் மூலம் மேற்கொண்ட தவறுகளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருத்திக் கொள்ள சந்தர்ப்பம் இருப்பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்ட நீடிப்புத் தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

உங்களது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமாயின் எங்களுடன் இணைந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாகச் சுமத்தப்படும் (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் ஆயுதக் கொள்வனவுக்கு ரஷ்யா 300 மில்லியன் டொலர் நிதியுதவி

## ஜனாதிபதி கைச்சாத்திடுவார்

(கொழும்பு)

இலங்கை ரஷ்யாவுடன் மேற்கொள்ளவுள்ள ஆயுதக் கொள்வனவுக்கு 300 மில்லியன் டொலர்களைக் கடனாக வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது.இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இலங்கை ரஷ்யாவிடமிருந்து பெருமளவான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புரட்சி அச்சமே அவசர காலச் சட்ட நீடிப்பு

### இந்தியச் செய்திகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவப் புரட்சி ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இலங்கையின் அவசர காலச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அவசர காலச் சட்டம் இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது. 102 வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் இராணுவப் புரட்சி ஏற்படலாம் என்ற காரணத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நேற்று ரஷ்யா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்யா சென்றுள்ளார்.எதிர்வரும் 9 ஆம் திகதி வரை அவர் ரஷ்யாவில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது ரஷ்ய ஜனாதிபதி அந்நாட்டின் கடன் திட்டம் ஒன்று குறித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ,இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயமாக இது அமைகிறது. பிரத்தியேக விமானமொன்றில் இவர் நேற்றுக் காலை ரஷ்யாவிற்குப் பயணித்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-3,5,9)

## பொன்சேகாவின் படையணியை தாக்கி அழிக்க திட்டமிடப்பட்டதா?

### கொழும்பு ஊடகம் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகா வெற்றிபெற்றிருந்தால் அவருக்கு ஆதரவான சிங்க படையணியையும், கொமாண்டோ படையணியையும் அழித்து ஆட்சியை கைப்பற்ற சிறப்பு படையணியும், கஜபா படையணியும் தயார் நிலையில் இருந்ததாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் பொன்சேகா இராணுவப்புரட்சியை மேற்கொள்ளவுள்ளதாக அரச ஊடகங்கள் தேர்தலின் பின்னர் பல நாட்கள் தொடர்ச்சியாக தலைப்பு செய்திகளை வெளியிட்டு வந்தன.

ஆனால் உண்மையில் என்ன நடைபெற்றது என்பது தொடர்பான தகவல்கள் இராணுவத்திற்குள் இருந்து அறியப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு தோல்வி ஏற்படலாம் என்ற கணிப்புக்கள் உருவாகியதை தொடர்ந்து அரசு தொடர்ச்சியாக பாதுகாப்புச்சபை கூட்டங்களை மேற்கொண்டு வந்தது. (15 ஆம் பக்கம் பார்க்க)



ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ரஷ்ய அதிகாரிகள் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

## தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரி.எம்.வி.பி. கட்சிக்குள் முரண்பாடு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்த விசேட கூட்டம் ஒன்று மட்டக்களப்பில் நடைபெற்றதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுவதா? அல்லது தனித்துப் போட்டியிடுவதா? என்பது தொடர்பில் உறுப்பினர்களுக்கிடையில் மாறுபட்ட கருத்து நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்த தீர்மானத்தை எடுப்பதற்காக வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படலாம் என்று குறிப்பிடப்படுகின்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (16 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கொள்வனவு, ஏவுகணைத் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட இருவர் மறியலில்!

(கொழும்பு)

படையினர் மீது தாக்குதல் மேற்கொள்வதற்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் தோட்டாக்களை சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான 24கோடி ரூபா பெறுமதியான எம்.ஐ. 24ரக தாக்குதல் உலங்குவானூர்தியை அழித்த விடுதலைப் புலி உறுப்பினர் ஆகிய இருவரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள கொழும்பு பிரதான நீதவான் சம்பா ஜானகீ ராஜரட்ணம் பொலிஸாருக்கு அனுமதியளித்துள்ளார்.

சீனாவிடமிருந்து மிகவும் இரகசியமாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுதங்களும், தோட்டாக்களும் கொரிய பிரஜைகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 10கப்பல்களில் பகுதி பகுதியாக இலங்கைக்கு கொண்டு வந்ததாகவும், வானூர்தியைத் தாக்கியழிக்கக் கூடிய சாம் ஏவுகணைக் கூடு விடுதலைப் புலிகளின் முகாமொன்றிலிருந்து மீட்கப்பட்டு தற்போது ரத்மலான விமானப்படைகளின் முகாமில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு கப்பல் மூலம் ஆயுதங்களைக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் தொண்டமானாற்றைச் சேர்ந்த எம்.ராஜேந்திரன் கருணாகரன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டு வானூர்தியை அழித்ததாகக் கூறப்படும் அருளானந்தன் நிஷாந்தன் ஆகிய இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

எம்.ஐ.24ரக உலங்குவானூர்தியை ஏவுகணை மூலம் தாக்கியழித்த சம்பவம் குறித்த விசாரணைத்தகவல்களை நீதிமன்றத்திற்கு அறிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 2000ம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதி திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட சாம் 3ரக ஏவுகணைகளைத் தாக்குதலினால் வானூர்தி உப்பாறு களப்பில் வீழ்ந்ததாகத் தகவலளித்தனர்.

அருளானந்தன் நிஷாந்தன் என்ற சந்தேக நபர் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டுள்ளதாகவும் இறுதிக் காலம் வரை அவர் இயக்க செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஏவுகணையின் கூட்டில் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட திகதி, நேரம், மேற்கொண்டவரின் பெயர் விபரங்களை தமிழ்மொழியில் கூட்டில் பதித்து களஞ்சியப்படுத்துவது தெரியவந்ததாகவும், விடுதலைப் புலிகளுக்கெதிரான இறுதி யுத்தத்தின் போது இவ்வாறான பல ஏவுகணைக் கூடுகள் மீட்கப்பட்டதாகவும் தகவலளித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், மீட்கப்பட்ட ஏவுகணைக் கூடுகளில் எம்.ஐ.24ரக வானூர்தியை அழிப்பதற்குப் பயன்படுத்திய ஏவுகணைக் கூடும் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து மேலும் பல தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமெனக் குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் இதன் போது அனுமதி கோரினர். பின்னர் வேண்டுகோளுக்கு அனுமதியளித்த நீதவான் எதிர்வரும் 26ஆம் திகதி விசாரணைகளின் நிலைமை குறித்து மீண்டும் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ச-5)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத் தியசாலை இரத்தவங்கி பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் தலைமையிலான குழுவினரால் நடத்தப்பட்ட இரத்த தான நிகழ்வில் உரும்பிராய் கிழக்கு சென்மைக்க அலகிலுள்ள 29 தொண்டர்கள் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

இதில் கோப்பாய் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் எஸ்.குகராஜன், கனேடிய செஞ்சிலுவைச் சங்க நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.இளங்கோ ஆகியோர் பங்கு பற்றியுள்ளனர். (ச-4,134)

## கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் காரைநகர் பிரிவினால் நடத்தப்படவிருக்கும் கணனி பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்ப படிவத்தினை காரைநகர் பிரிவு காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்று, பூரணப்படுத்திய விண்ணப் பங்களை எதிர்வரும் 14.02.2010ஆம் திகதிக்கு முன் நேரில் ஒப்படைத்து தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பிரிவின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவாக முஸ்லிம் மக்கள் வாக்களித்தனர்

### அமைச்சர் பதியூதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்துள்ளதாக அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஜனாதிபதிக்கு சார்பாகவே வாக்களித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு முஸ்லிம்கள் வாக்களித்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டு வரும் கருத்துக்களில் உண்மையில்லை. 56வீதமான முஸ்லிம்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

ரவூப் ஹக்கீம் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்ள உள்ளதாக வெளியாகும் வதந்திகளில் உண்மையில்லை எனவும் அவரை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது எனவும் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ரவூப் ஹக்கீம் ஏற்றுக் கொண்டதன் பின்னர் முஸ்லிம் வாக்காளர்களின் ஆதரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஹக்கீமை மக்கள் ஓர் துரோகியாகவே நோக்குவார்கள் எனவும் மிகவும் முக்கியமான நேரத்தில் அவர் கட்சி தாவியுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் தமிழ் மக்களின் ஆதரவினையும் பெற்றுக் கொள்ள சில சதித்திட்டங் களை ஹக்கீம் முன்னெடுத்து வருவதாக பதியூதீன் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஒளிப்படத் தொகுப்பும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றிய முன்னாள் உறுப்பினர் அமரர் சத்தியேந்திராவின் 21 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நூல்கள் மற்றும் ஒளிப்படத் தொகுப்பு வெளியீடு நிகழ்வும் இன்று பிற்பகல் 3.00மணியளவில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மனநல மருத்துவர் கலாநிதி எஸ்.சிவதாஸ் எழுதிய ‘நலமுடன்’, ‘மகிழ்வுடன்’ ஆகிய நூல்களும், ஆயிரம் வார்த்தைகள் ஒளிப்படத் தொகுப்பும் இடம்பெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிவித் துள்ளது. (ச-9)

## குழந்தைகளுக்கான பொருட்கள் வழங்கல்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து நல்லூர் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் மக்களில் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு டெனிஸ் அகதிகள் நிறுவனத்தினால் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குழந்தைகளுக்கான பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

REPAIRING

சகலவிதமான கணனிகளும் ஒரே நாட்களில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாட்களில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
T.P.:021-2224459, 0774192275
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்
(C-4403)

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Head Office 385, Galle Road, Colombo-06.
T.P.:021-222-4459, 0774192275 Fax: 222-4460

COMPUTER CLASSES
Certificate in Internet & E-Mail
Chatting, Downloding, Web & E-Mail Address Creating, Video Call, Net Call, Facebook
என்பன ஆரம்பத்தில் இருந்து சுற்பிக்கப்படும்.
(Duration 2 Weeks, Course Fees 1000/-)
சான்றிதழ்கள் அனைத்தும் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்.
1 BATCH AT 6 STUDENTS
(தொழில் புரிபவர்களுக்கான விஷேட நேர வகுப்புகளும் நடைபெறவுள்ளது)
தரம் 3 முதல் 7 வரையான மாணவர்களுக்கு
KIDS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்
(C-4403)

ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 29 (B.Sc),33,37 வயது, Canada Citizen 31,34,36 வயது, Swiss Citizen 28,32 வயது, Austerliya Citizen 36 வயது (M.Sc), Holand Citizen 37 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673
www.ayngaranwedding@yahoo.com
(576)

10ஆவது பிறந்த நாள் நினைவுகள்



புதிய உயர் கல்லூரி இயக்குநர்களான திரு.திருமதி சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் ஆருயிர் புதல்வன்

அமரர் ச.சந்துதன்

அவர்களை அவர்களின் 10ஆவது பிறந்த நாளாகிய இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

புதிய உயர் கல்லூரி
-உறவுகள்-
(C-4399)

Computer Express
Institute of Information Technology



கணனி ஆர்வலர்களே!
பாடசாலை மாணவர்களே!
ஊழியர்களே! தங்கள் நலன்கருதி
யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்
தொழில்சார் கணனி கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன...

Professional Diploma in Microsoft Office — 3500/= — 3 Months
Diploma in Printing Technology & Desk top Publishing — 22500/= 4500/= — 4 Months
Diploma in Server Technology & Web Page Designing — 22500/= 4500/= — 3 Months
80% Off
Diploma in Graphic Designing & Adverdisement Marketing — 22500/= 4500/= — 4 Months
Diploma in Hardware Engineering & Net working — 20000/= 4000/= — 3 Months
Diploma in Computerized Accounting & E-Commerce — 22500/= 4500/= — 3 Months
Diploma in Computer Science & Programming — 22500/= 4500/= — 4 Months
Diploma in Auto CAD & Arcetecture Designing — 22500/= 4500/= — 3 Months
Honours Diploma in Information Technology — 32500/= 6500/= — 6 Months

100% செய்முறைப்பயிற்சி ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட கணனி செலுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

50 % Advance Courses
Diploma in Film Technology & Video Editing — 10000/= 5000/= — 4 Months
Diploma in Studio Technology & Multi Media — 9500/= 4750/= — 4 Months

எமது ஆய்வுகூடத்தில் கம்பியூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம்செய்வதால் கம்பியூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

No.167, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 8250

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch I 10.02.2010 9AM or 2PM
Batch II 12.02.2010 9AM or 2PM
Batch III 13.02.2010 9AM or 1PM
Batch IV 14.02.2010 9AM or 1PM
(C-4401)

# மாவட்ட மட்ட வீட்டுத் தோட்ட போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சு, உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம் ஆகியன இணைந்து நடத்திய 2009 ஆம் ஆண்டிற்கான மாவட்ட மட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் வெற் றியீட்டியவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலக கூட்ட மண்டபத்தில் மாவட்ட விவசாயக் குழு முன்னிலையில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் பிரதேச செயலக பிரிவு ரீதியாக வருமாறு,

**தனியார் வீட்டுத்தோட்டப் போட்டி**

தெல்லிப்பழை -வத்சலா துரைசிங்கம் (தோதரை அம்மன் கோவிலடி), நல்லூர் - எஸ்.விக்கினேஸ்வரி - (நாயன்மார்க்கட்டு), காரைநகர் - சு.சண்முகராசா (தங்கோடை)

**பாடசாலை வீட்டுத்தோட்டப் போட்டி**

யாழ்ப்பாணம் - சென்ஜோன்ஸ் கல்லூரி, கரவெட்டி-விக்னேஸ்வரா கல்லூரி, நல்லூர்-கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

**பாடசாலை மாணவர் வீட்டுத் தோட்டப் போட்டி**

கரவெட்டி-பா.வசீகரன்(கரணவாய் கிழக்கு), தெல்லிப்பளை-இ.திலக்சன் (அளவெட்டி மேற்கு), வேலணை- ம.சுஜிதன் (நயினாதீவு)

**அலுவலக வீட்டுத் தோட்டப் போட்டி**

கோப்பாய்-விதாதவள நிலையம் (மானிப்பாய் கைதடி வீதி), சங்கானை-கிராம அலுவலர் அலுவலகம் (வட்டுக்கோட்டை கிழக்கு), தெல்லிப்பழை -பிரதேச செயலகம் (தெல்லிப்பளை)

**அலுவலரின் உத்தியோக / பிரத்தியேக வதிவிட வீட்டுத் தோட்டப் போட்டி**

தெல்லிப்பளை - கு.சிவலிங்கம் (இளவாலை), வேலணை - ஜெ. சுபாஜினி (நயினாதீவு), சாவகச்சேரி ச.கிரிதரன்- (மட்டுவில்). (6)

# 784 வழி இலக்க பஸ் சேவையை மீளவும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(பொன்னாலை)

யாழ்.நகரிலிருந்து அராலி - வட்டுக்கோட்டை வீதியூடாக காரைநகர் வரையில் இடம்பெற்று வந்த 784 வழி இலக்க பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இப்பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக அவர்கள் தெரிவித்திருப்பதாவது,

தற்போது தென்பகுதிகளிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் தொகையும் அதிகரித்துள்ளது.

இதற்கமைய காரைநகரிலும் கசூர்னா கடற்கரை, ஈழத்துச் சிதம்பரம், வாரிவளவு விநாயகர் ஆலயம் போன்ற இடங்களைத் தரிசிப்பதற்காக தினமும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

இவர்களின் போக்குவரத்துக்குப் போதியளவான பஸ் சேவைகள் இல்லாதிருப்பது பெருங்குறையாகவிருப்பது மட்டுமன்றி, குடாநாட்டில் மீள்குடியமர்ந்தோர் தொகையும் அதிகரித்திருப்பதால் அவர்களின் உள்ளூர் போக்குவரத்தும் அதிகரித்திருக்கின்றது.

எனவே, இவர்களின் போக்குவரத்து நன்மை கருதி பஸ் போக்குவரத்துச் சேவைகளையும் அதிகரிக்க வேண்டியுள்ளது.

தற்போது யாழ்.நகரிலிருந்து காரை நகருக்கு மூன்று வழி இலக்க பஸ்சேவைகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்.நகரிலிருந்து மானிப்பாய் -பொன்னாலை வீதியூடாக 782 வழி இலக்க சேவையும், யாழ்.நகரிலிருந்து ஆனைக்கோட்டை - நவாலி வீதியூடாக 786 வழி இலக்க சேவையும், யாழ். நகரிலிருந்து அராலி- வட்டுக்கோட்டை வீதியூடாக சித்தன் கேணிச் சந்திவரை சென்று மீண்டும் பொன்னாலை வீதியில் ஏறி காரைநகர் செல்லும் 785 வழிஇலக்க பஸ் சேவை ஆகியனவே இடம்பெற்று வருகின்றன எனினும், இச் சேவைகள் அதிகரித்ததாக காணப்படவில்லை. காரைநகருக்கான மிகக் குறுந்தூர வழிச்சேவையும் - தற்போது குடாநாட்டில் மீள் குடியமர்ந்திருக்கும் பெரும்பாலான மக்களின் பிரயாண தேவையையும் கருதி 784 வழி இலக்க பஸ்சேவையை விரைவில் ஆரம்பிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-49)

# வன்முறை - அதன் சமய வேர்கள் கருத்துரை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற 'வோறம்' எனப்படும் கருத்துப் பரிமாற்றக் கள நிகழ்வின் ஏழாவது அமர்வு நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கல்லூரியின் கருத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது, "வன்முறை - அதன் சமய வேர்கள்" என்னும்பொருளில் அருள் கலாநிதி ஏ.எப்.ஜெயசேகரம் அடிகள் ஆங்கில மொழியில் உரையாற்றுவார். தொடர்ந்து கருத்துப் பரிமாறல் இடம்பெறும்.

ஆங்கில மொழி சார் புலமையாளர்கள் கலந்துகொள்ளும் இவ்வமர்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ள முடியும் என்று கலைத்தூது அழகியல் கல்லூரியினர் தெரிவித்துள்ளனர். (2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10, 11 இற்கு குடியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு வினா தயாரித்தல் தொடர்பான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் குறித்த ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

# கூட்டுறவு ஓய்வு விடுதி திறக்கப்பட்டுள்ளது

(வேலணை)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனை அமைந்துள்ள கட்டடத் தொகுதியின் மேல் பகுதியில் கூட்டுறவு ஓய்வு விடுதி திறக்கப்பட்டுள்ளது.இவ்விடுதியில் நயினாதீவுக்குச் சென்றுவரும் தென்பகுதி மக்கள் இரவுவேளைகளில்தங்கிச் செல்கின்றனர்.

வேலணைப் பகுதியில் திறக்கப்பட்ட முதல் ஓய்வு விடுதி இது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# மேலும் ஒருதொகுதி பொறியியலாளர் குழு யாழ். தொழில்நுட்ப கல்லூரிக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

கொரிய நாட்டுப் பொறியியலாளர்களில் மேலும் ஒருதொகுதியினர் நேற்று காலை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தந்துள்ளதாக கல்லூரியின் அதிபரும் பணிப்பாளருமான ந.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இங்கு வந்துள்ள 13பேர் அடங்கிய குழு கணனி இயந்திரவியல், பொறி இயந்திரவியல் என்பவற்றிற்கு நான்கு பேரும், தன்இயக்க இயந்திரவியலுக்கு மூன்றுபேரும் மின் இயந்திரவியலுக்கு ஒருவரும் உள்ளாகுவர்.

மேலும் கொரியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளினை பொருத்துவதற்காகவே இக் குழு வருகை தந்துள்ளதாகவும் இன்னும் சில வாரங்களில் மேலும் பலர் வருகை தரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-30)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Dec 2009 to May 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48


விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2010

(C-4400)


10வது அகவையில் 150ஆம் நாள்
நினைவுக் காணிக்கை



சண்முகநாதன் அருள்நங்கை தம்பதியரின்
செல்வப் புத்திரன் அமரர் சந்துதன்

எம் அருமை மகனே சந்துதா!

உனது பொன்னான பிறந்த நன்நாளில் உன் நினைவு எம்மை தணலாக சுடுகின்றது. உன் பிறந்த நாள் இந்த ஒன்பது வருடத்திலும் உற்றாரும் ஊர வரும் எல்லோரும் ஒன்றுகூடி கழிக்கும் நன்நாளாக இருந்த அந்த நாட்களை மறக்கமுடியவில்லை. இன்று நீ இல்லையே என்பதை எண்ணிப் பார்க்க முடியவில்லை நீ புதையுண்ட இடத்திலே தான் இந்தப் பிறந்த நாளை நினைவு கூரவுள்ளோமெடா 'சந்துதம்' எனும் உன் நினைவாய் நாம் அமைத்திருக்கும் நினைவாலயத்திலே நீ நிழலாக இருந்து எம்துயர் துடைக்க வேண்டுகிறோம். ஆண்டவனாய் போன உன்னை வணங்குகின் றோம் ஐயா. மறுபிறப்பு நீ எடுத்து என்னிடத்தில் மீண்டும் நீ வந்து விட்டாய் என்ற ஆத்ம திருப்தியோடு உன்னை நாம் அவ்வுருவில் பார்க்கின்றோம். அறிவுக் கடலான உன்னை ஆண்டவன் அறிவற்ற எம்முடன் வாழாது பறித்த அந்தத் துயரத்தை ஆண்டாண்டு அழுதாலும் தீர்க்க முடியாதடா. ஆனாலும் வாழ்கின் றோம் உன்நினைவோடு. கடவுளான உன்னை வாழ்த்திவணங்குகின்றோம்.

'லெட்சுமி' சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

உன்நினைவில் வாழும்
பெற்றோர்

(C-4398)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

எக்ஸ்போ எயார் விமான சேவை நிறுவனத் தின் அனுசரணையுடன் யாழ். நகர் மைய றோட்டறிக் கழகம் நடத்தும் பாடசாலைகளுக் கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள் மோதவுள் ளன. நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி ஆகிய அணிகள் மோதவுள் ளன. (6-4)

## சட்ட விரோதமாக மணல் அகழ்வு

(வேலணை)

வேலணை மண்கும்பான் பகுதியி லிருந்து மணல் ஏற்றி விற்பனை செய்வ தற்கு பிரதேச செயலகத்தினரின் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் சிலர் சட்டவிரோத மாக மணல் ஏற்றி வேலணை சரவணைப் பகுதியில் விற்பனை செய்து வருவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக இந்த சட்டவிரோத மண் அகழ்வு இரவு வேளைகளில் 7மணிக்கும் அதி காலை 3 மணிக்கும் இடையில் இடம்பெறு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# இலங்கை பங்குச்சந்தை தொடர்பான கருத்தரங்கு

இலங்கை பங்குச்சந்தை செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 8 மணி முதல் 12.30 மணி வரை க.பொ.த உயர் தரவர்த்தகப் பிரிவு தரம் 12,13 மாணவர்களுக்கும் வர்த்தக ஆசிரியர் களுக்குமான செயலமர்வும் பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை தரம் 11இல் வணிகக் கல்வியும் கணக்கீடும், முயற்சியாண்மைக் கல்வி ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வும் நடைபெறவுள்ளது.

மேலும் இச்செயலமர்வு பாடத்தில் உள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இருப்ப துடன் பங்குச் சந்தை தொடர்பான சந்தேகங் களைக் கேட்டு தெளிவு பெறமுடியும் எனவும் பங்குச் சந்தை உத்தியோகத்தர்களால் தமிழ் மொழி மூலம் நடத்தப்படவுள்ளதால் சகலரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (6-4-19)

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் நீர் அள்ளச் சென்றவேளை அதற்குள் தவறி வீழ்ந்து சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஜெயக்குமார் அஜய்குமார் (வயது-8) என்ற சிறுவனே இவ்வாறு மரணமடைந் துள்ளான். இது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வரும் ஊர்காவற்றுறை பொலிசார் பிரேத பரிசோதனைக்காக பிரஸ் தாப சிறுவனின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (2-27)

## புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளர்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தின் கரவெட்டி கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய க. அம்பலவாணர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையால் அவ்வெற் றிடத்திற்கு மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி த. தவேந்திரராஜா நியமிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4-19)

## இராசி பலன்

*07-02-2010*
*(தை 25, ஞாயிற்றுக்கிழமை)*
*நவமி முன்னிரவு 11.36 மணி வரை*
*அனுசம் முழுவதும்*
*இராகுகாலம் 5.05-6.35 மணி வரை*
*சுபநேரம் 9.35-11.05 மணி வரை*

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத பகை, புதிய திருப்பம், ஆரோக்கியக் குறைவு, தனவிரயம். |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வசிந்தை, நண்பர்கள் சந் திப்பு, தேகநலன். |
| மிதுனம் | தொழில்சிந்தை, ஆரோக்கிய நிலை, ஜனவசியம், விருந்துபசாரம். |
| கடகம் | பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, புத்திரரால் கவலை, கடின முயற்சி. |
| சிங்கம் | மனச்சஞ்சலம், தேகநலன், சுப செய்தி, முயற்சி தாமதம். |
| கன்னி | சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, காரிய அனுகூலம். |
| துலாம் | போசனக் குறைவு, விவாதம், தொழில்சிந்தை, மனச்சோர்வு. |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, உறவினர் அனு சரணை, போகனசுகம், வெகுமானம். |
| தனுசு | காரிய அலைச்சல், கடின வார்த்தை, அதிக செலவு, சோம்பல் நிலை. |
| மகரம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், புகழ். |
| கும்பம் | பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம், நல்ல செய்தி, காரிய சித்தி. |
| மீனம் | புதிய திட்டமிடல், தேவையற்ற பயம், பெரியோர் உதவி, பிரயாண சுகம். |

வளவன்

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை நடேஸ்வரக் கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மைதானத் தில் அதிபர் பொ. அமிர்தலிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் சி. சுகுமாரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க. சிவராசா கலந்து கொள்ளவுள்ளார்.

(அல்வாய்)

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கி. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அம்பலவாணர் கலந்து கொண்டு வெற்றி யீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (6-4-19)

## வாரம் ஒரு தகவல்

## விஷப்பரீட்சை

"சேர்... உங்களுக்கு என்ன ஆச்சு?"

"என்ன சொல்றீங்க?"

"கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டீங்க... சரி; சாப்பிட்டு வெற்றிலை பாக்கு போட்டீங்க... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விஷயம்?"

"ஹி! அதுவா? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம்! கொட்டினால் வலி தாங்க முடியாது. அங்கே பந்தல் முகப்பில் நின்றுகொண்டிருந்தபோது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராகப் பறந்ததைப் பார்த்துவிட்டேன். அதுதான் பறந்து வந்துவிட்டேன்."

"தேனீ கொட்டினால் வாதநோய்க்கு நல்லது சேர்"

"அப்படித்தான் சொல்வது வழக்கம். அது உண்மையா?"

"லண்டன் விஞ்ஞானிகள் தேனீ விஷத்திலிருந்து Peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே"

"அப்படியா?"

"ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந்துகளைக் கொடுப்பது வழக்கம். அதை யெல்லாம்விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப்பிட்டுக் கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச்சல் கிடையாது சேர்."

"இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர். அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள்..."

"சரி... நான் தான் அப்படி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்படி ஓடிவரவேண்டும்?"

"நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 140 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 110 | 120 | 120 |
| பூசணி | 30 | 50 | 30 |
| புடோல் | 80 | 90 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 130 | 140 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 160 | 120 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

# நீர்வேலி பொது அமைப்புக்களின்

# கண்ணீர்க் காணிக்கை



தோற்றம்
05
11
1948

மறைவு
03
02
2010

## அமரர்

## கார்த்திகேசு சிவபாலன் (J.P) அவர்கள்

உண்மையே தெய்வமென்ற ஒப்பில்லா வாழ்க்கையில்
நன்மையே நாளுஞ்செய் திட்டநல்-அண்ணல்
சிவபாலன் எம்மூரை வாழ்வித்தான் என்றும்
நுவன்றிருப் போமிதை நன்று


### அமரரது கௌரவப் பதவிகள்:

- சமாதான நீதிவான்
- தலைவர், வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
- தலைவர், நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனம்
- தலைவர், சிவசங்கரபண்டிதர் சனசமூக நிலையம்
- செயலாளர், நீர்வேலி கந்தசாமி கோவில் பரிபாலனசபை
- நிர்வாக உறுப்பினர், ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம்
- பொருளாளர், நீர்வேலி தெற்கு, ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை
- உறுப்பினர், மத்தியஸ்தர் சபை, வலி.கிழக்கு
- நிர்வாக உறுப்பினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அத்தியார் இந்துக் கல்லூரி
- நிர்வாக உறுப்பினர், பழைய மாணவர் சங்கம், அத்தியார் இந்துக் கல்லூரி
- வலி.கிழக்கு பண்பாட்டுப் பேரவை விழாக்குழு உறுப்பினர்
- கோப்பாய் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்

### அஞ்சலிப்போர்:

- நீர்வேலி தெற்கு, விவசாய சம்மேளனம்
- சிவசங்கரபண்டிதர் சனசமூக நிலையம், நீர்வேலி
- நீர்வேலி கந்தசாமி கோவில் பரிபாலன சபை
- ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபை
- அத்தியார் இந்துக் கல்லூரிச் சமூகம்
- ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை
- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், நீர்வேலி தெற்கு
- கிராம முன்னேற்றச் சங்கம், நீர்வேலி தெற்கு
- சமுதாய முன்னேற்றக் கழகம், நீர்வேலி
- இந்து இளைஞர் மன்றம், நீர்வேலி தெற்கு
- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயச் சமூகம்
- ஸ்ரீ கணேச சனசமூக நிலையம்
- ஸ்ரீ கணேச அறநெறிப் பாடசாலை
- ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம்
- பரமேஸ்வரி சனசமூக நிலையம்
- திருமுருகன் திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்
- நீர்வேலி தெற்கு, ஒல்லை ஞானவைரவர் தேவஸ்தானம்
- நீர்வேலி தெற்கு, இந்து தமிழ்க் கலவன் பாடசாலைச் சமூகம்
- நீர்வேலி மத்தி, இளைஞர் சனசமூக நிலையம்
- திலீபன் சனசமூக நிலையம்


(C-4395)



12

# இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு

மஹிந்தவைப் பாதுகாப்பதில் தமது தேசப்பற்றை வெளிக்காட்டுகின்றனர். எமது நாட்டை பிரபாகரனிடமிருந்து மீட்டெடுக்கவும் வேண்டும். வல்லரசுகளின் பிடியிலிருந்து மீட்கவும் வேண்டும். இந்திய அரசியல் ஆதிக்கத்திலிருந்தும் மீட்க வேண்டும். இந்தியா எமது நாட்டை ஆக்கிரமித்து இந்த வளங்களைப் பெறவில்லை. சிறிய அழுத்தம் போதும், கேட்பதை உடனே தூக்கிக் கொடுத்து விடுகிறது அரசாங்கம். சோமவன்ச கூறுவதைப் போன்று எமது ஜனாதிபதி இந்திய உயர்ஸ்தானிகரை அவரது வீட்டுக்குச் சென்று அடிக்கடி சந்திக்கிறார். உலகின் எந்தவொரு அரசியல் தலைவரும் செய்யாத ஒரு கேவலமான வேலையை ஜனாதிபதி செய்கிறார். எனவே இவருடைய அடிபணிதலை பயன்படுத்தி இந்தியா எமது வளங்களைக் கொள்ளையடிக்கிறது. மின்சாரம் மற்றும் எண்ணெய் விநியோகம் இந்தியாவின் கைக்குச் செல்லப் போகிறது. இது ஒரு பாரதூரமான விடயம்.




இன்னொரு முக்கியமான விடயமும் இருக்கிறது. இந்தியாவினால் மேற்கொள்ளப்படவிருக்கும் மின்சார "கேபிள்" அமைத்தல் இது தனுஸ் கோடியிலிருந்து தலைமன்னார் ஊடாக அமைக்கப்படவிருக்கிறது.

இந்த வேலையைப் பூர்த்தி செய்ய ஒரு வருடமாகும். இந்திய அதிகாரிகள் இந்த வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். அவர்களது வேலை முடியும் வரை மன்னார் கடல் பிரதேசத்தில் எண்ணெய் அகழ்வை மேற்கொள்ள முடியாது. கேபிள் அமைத்து முடித்த பின்னர் கூட எண்ணெய் அகழ்வை மேற்கொள்ளவிருக்கும் நிறுவனம், அதற்கான முதற்கட்ட வேலைகளை ஆரம்பிக்கும் போது மின்சாரக் கேபிள் பழுதடைந்து விடும். ஆகவே, இந்தப்பகுதியில் அகழ்வை மேற்கொள்ள அனுமதிக்க முடியாதென இந்தியா தடுக்கக்கூடும்.

எனவே, எண்ணெய் அகழ்வையும் இந்தியாவிடமே ஒப்படைக்க வேண்டிய நிலை உருவாகும். இப்படிச்சுற்றிச் சுற்றி இறுதியாக இந்தியாவின் காலடியில் விழுவதைத் தவிர வேறொன்றும் நடக்கப் போவதில்லை.

கிழக்கு மாகாணம் இந்தியாவின் கைகளுக்குச் செல்வதைப் போன்று, மன்னார் வளைகுடாவும், அங்குள்ள வளங்களும் இந்தியாவின் கைகளையே சென்றடையும்.

கச்சதீவை இந்தியா மீண்டும் கேட்கிறது. பத்திரிகை வாயிலாக இதனை அறிந்திருப்பீர்கள். சிறிமா சாஸ்திர ஒப்பந்தத்தின் வாயிலாக கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவை மீண்டும் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இந்தியா இறங்கியிருக்கிறது. இதனால் தான் இலங்கையைச் சுற்றி வலை விரித்து வருகிறது இந்தியா? கிழக்கு மாகாணம், மன்னார் வளைகுடா, இப்போது வடக்குக்கும் வலை விரித்திருக்கிறது.

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் டில்வின் சில்வாவினால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

வடக்கிலும் எமக்குச் சொந்தமான வளம் இருக்கிறது. மூடப்பட்டிருக்கும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை. அக்காலத்தில் காங்கேசன்துறை சீமெந்துக்கு இலங்கை பூராகவும் நல்ல மதிப்பிருந்தது. சுவட்டுத்தானத் துக்குச் சொந்தமான காங் கேசன்துறை தொழிற்சாலையை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தம் செய்யப்படவிருக்கிறது.

சீமெந்துத் தொழிற்சாலை மாத்திரமல்ல அங்கிருக்கும் பாரிய சுண்ணாம்புப் படிமத்தையும் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராவது தெரிகிறது.



காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை


"இலங்கையில் சீமெந்து ஏகபோகமொன்று இருப்பதாகவும் அதனை இல்லாமலாக்க வேண்டுமாயின் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை "பிர்லா" நிறுவனத்துக்கு வழங்க வேண்டுமெனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன பத்திரிகையொன்றுக்குக் கூறியிருந்தார்.


ஆகவே, சீமெந்து ஏகபோகத்தை ஒழிக்கும் போர்வையில் சுண்ணாம்புப் படிமங்களையும் இந்தியாவிடம் ஒப்படைக்கப் போகிறார்கள்.

வடக்கில், கிழக்கில் மாத்திரமல்ல இப்போது தெற்கிலும் கை வைக்கப் போகிறார்கள். தெற்கின் காலியிலிருந்து மாத்தறை வரை புதிய புகையிரதப் பாதை அமைத்தல் மற்றும் திருத்த வேலைகள் ஒப்பந்தத்தின் மூலமாக இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே காலியிலிருந்து மாத்தறை வரை புதிய புகையிரதப் பாதை அமைக்கும் பணியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இலங்கையால் இந்தப் புகையிரதப் பாதை அமைக்க முடியாதா? இங்கு தொழிலாளர்கள் இல்லையா? தொழில் நுட்பவியலாளர்கள் இல்லையா? இருக்கிறார்கள். தியாகத்தோடு உழைக்கத் தயாரானவர்கள் இருக்கிறார்கள்.






அண்மைக் காலமாக இலங்கை மீதான இந்திய தலையீடு

சுனாமியால் அழிக்கப்பட்ட, ரத்மலானையிலிருந்து காலி வரையிலான புகையிரதப் பாதையை 57 நாட்களுக்குள் அமைத்து நிர்மாணத்துறையில்புரட்சியை ஏற்படுத்தியவர்கள் எமது தொழிலாளர்கள். மக்கள்விடுதலை முன்னணியின் தொழிற்சங்க நிலையத்தின் புகையிரதத் திணைக்கள பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், ஊழியர்கள் எல்லோருமாய் சேர்ந்து 57 நாட்களுக்குள் இதனை அமைத்தார்கள். அப்படியொரு புரட்சியைச் செய்த எமது தொழிலாளர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் இருக்கும் போதுதான் இந்தப் புகையிரதப் பாதை அமைத்தல் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் மேற்கொள்ளவிருக்கும் மேலும் பல ஒப்பந்தங்கள் இருக்கின்றன. இவர்கள் "சீபா" என்ற ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர். இது ஒரு வர்த்தக ஒப்பந்தம். இது ஒப்பமிடப்பட்டால் இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலமாக மாறுவதைத் தவிர்க்கமுடியாது போகும். ஏற்கனவே ஒப்பமிடப்பட்ட இந்திய இலங்கை வர்த்தக ஒப்பந்தமொன்றும் இருக்கிறது. இதனால் பொருளாதார ரீதியில் நாம் பாதிப்புக்குள்ளாகியுள்ளோம். வர்த்தகத்தில் நட்டமேற்பட்டுள்ளது. இந்த நிலையில் தான் இந்த "சீபா" ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. அது ஒரு பக்கம்.

"டெலிமெடிசின்" என்ற பெயரில் திட்டமொன்றும் செயல்படவிருக்கிறது. அது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இது, இங்கிருக்கும் ஒரு நோயாளி இந்தியாவிலுள்ள மருத்துவ நிபுணர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது நோயைக் கூறி தேவையான மருத்துவகைகளை அறிந்து கொள்ள முடியும்.

இதனால் எமது பணம் இந்தியாவுக்குச் செல்லும். இது ஒரு சிறிய விடயம் தான். இப்படியான ஒவ்வொரு சிறு விடயங்களின் ஊடாகவும் எமது பொருளாதாரத்தை இந்தியா கொள்ளையிடுகிறது.

**டில்வின் சில்வா**
பொதுச்செயலாளர், மக்கள் விடுதலை முன்னணி

இலங்கையின் வர்த்தகச் சந்தையை எடுத்துக்கொண்டால் இந்தியப் பொருட்களே அங்கு நிறைந்திருக்கின்றன. இலங்கையின் தொழிற்துறைகளில் பெருமளவு இந்தியாவின் கைவசமே இருக்கிறது. மோட்டார் சைக்கிள், ஆட்டோ, பேருந்துகள் ஆகியன இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. (தொடரும்)

# கராச்சியில் இரட்டை குண்டு வெடிப்பு
# 22 பேர் பரிதாப பலி ; 50 பேர் படுகாயம்

(கராச்சி)

கராச்சியில் மத ஊர்வலத்திற்காக பஸ்சில் சென்றவர்களை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியது உட்பட இரண்டு குண்டுவெடிப்பு சம்பவங்களில் 22 பேர் பலியாகினர்.50க்கும்மேற்பட்டோர்காயம்அடைந்தனர்.

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில் மத ஊர்வலம் ஒன்றில் பங்கேற்பதற்காக ஷியா பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் பலர் பஸ் ஒன்றில் சென்றனர். நகரின் ஷராக் -இ-குவைதீன் பகுதியில் பஸ் சென்ற போது திடீரென குண்டு வெடித்தது. உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் 3.05 மணி அளவில் இந்த சம்பவம் நடந்தது. இதில் பஸ்சில் இருந்த 12 பேர் பலியாயினர். 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். குண்டு வெடித்தது எப்படி என்பது தொடர்பாக குழப்பம் நீடிக்கிறது.

இருந்தாலும் பஸ் சென்ற பாதையில் வெடி குண்டு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை நிறுத்தி அதை ரிமோட் கன்ட்ரோல் மூலம் பயங்கரவாதிகள் வெடிக்கச் செய்திருக்கலாம்.

இதில் தான் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது என கராச்சி பொலிஸ் அதிகாரி வாசீம் கூறியுள்ளார்.

அதேநேரத்தில் நகரில் உள்ள ஜின்னா முதுகலை மருத்துவக் கல்வி மைய மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு மற்றொரு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இந்த குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர். (6)

# இந்தியர்கள் மீதான தாக்குதல் குறித்து
# ஆஸ்திரேலியாவுக்கு இந்தியா கடுமையான எச்சரிக்கை

இந்தியர்கள் மீது அவுஸ்திரேலியாவில் நடக்கும் தாக்குதல்கள் நீண்ட கால அடிப்படையில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் எனவும் அவுஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதர் சுஜாதா சிங் அவுஸ்திரேலியா ஆளுநரிடமே எச்சரித்துள்ளார்.

அவுஸ்திரேலிய ஆளுனர் குயென்டின் பிறைஸ்க்கும் இந்தியத்தூதர் சுஜாதா சிங்கிற்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளியன்று நடந்தது. இந்த சந்திப்பின் போது நடந்த பேச்சு வார்த்தை விவரங்களை தி ஏஜ். பத்திரிகை விரிவாக வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு

அவுஸ்திரேலியா முழுக்க இன வெறியுடன் இயங்குவதாக இந்தியா கருதவில்லை. ஆனால் அவுஸ்திரேலியாவில் இந்தியர்களுக்கு எதிரான இனவெறித் தாக்குதல்களின் எண்ணிக்கை கூட எங்களிடம் இல்லை என அவுஸ்திரேலிய காவல்துறை அதிகார பூர்வமாகக் கூறுகிறது.


இந்தியர்கள் மீது நடந்த தாக்குதல்கள் குறித்து நியூசவுத் வேல்ஸ் குயின்ஸ்லாந்து தெற்கு ஆஸ்திரேலிய பகுதிகளில் உள்ள பொலிஸார் சிறப்பாக விசாரணை நடத்துகின்றனர். ஆனால் விக்டோரியாவில் உள்ள பொலிஸார் தாக்குதல்கள் இடம்பெறவே இல்லை என்று மறுக்கும் மன நிலையில்தான் உள்ளனர். இந்தியர்கள் மீதான தாக்குதல்கள் கடுமையானவை அல்ல என அவர்கள் சாதிக்கின்றனர்.

இந்த தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க மேலும் நடவடிக்கைகள் அவசியம் இல்லாவிடில் இந்தியர்கள் மீதான தாக்குதல்களின் நீண்டகால விளைவுகள் கடுமையானதாக அமையும். இத்தகைய அணுகுமுறையை அவுஸ்திரேலியா பின்பற்றவில்லை. அவுஸ்திரேலியா சம்பவங்கள் குறித்து ஒரு தலைப்பட்சமாக இந்திய பத்திரிகைகள் தொலைக்காட்சி, வானொலி ஆகியவை திரும்பத் திரும்ப செய்தி வெளியிடுவதாக கூறப்படுகிறது. இவ்வாறு குற்றம் சாட்டுவதும் குறை கூறுவதும் எந்த வகையிலும் பிரச்சினைக்கு தீர்வு காண உதவாது இவ்வாறு சுஜாதாசிங் கூறியதாக தி ஏஜ் செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)



சிங்கப்பூரில் 2010ஆம் ஆண்டிற்கான சர்வதேச விமானக் கண்காட்சி நடை பெற்றது. இதில் உலக அளவில் பெரிய விமானங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதையும் பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்துச்செல்வதையும் படத்தில் காணலாம்.

# ஐதராபாத் கட்டட விபத்தில்
# இடிபாடுகளில் சிக்கி 14 பேர் பலி



(ஐதராபாத்)

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் உள்ள நாராயண குட்டா பகுதியில் 3மாடி பழைய கட்டடம் ஒன்று உள்ளது.

இக்கட்டடத்தில் விரிசல் ஏற்பட்டதால் அதைப் புதுப்பிக்கும் பணி நடந்து வந்தது. இப்பணியில் 40 இற் கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் நண்பகல் பாதிப்பேர் சாப்பிடுவதற்காக வெளியே சென்றனர். மீதி தொழிலாளர்கள் கொன்கிறீற் போடும் பணியில் ஈடுட்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக கட்டடம் இடிந்து விழுந்தது.

இடிபாடுக்குள் சிக்கி 13 பேர் பலிபானார்கள். காயம் அடைந்தவர்கள் அங்குள்ள காந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட னர். அதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்து போனார். இதனால் பலியானோர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. (6)

# பிலிப்பைன்ஸ் இராணுவ விமானம்
# விழுந்து நொறுங்கியதில் 9பேர் பலி

(கொடபடோசிட்டி)

பிலிப்பைன்ஸ் நாட்டு இராணுவத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்று கொடபடோ சிட்டி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது. பிலிப்பைன்ஸ் விமானப்படை மேஜர் ஜெனரல் மரியோ புட்ஜ் உள்ளிட்ட 8 பேர் அதில் பயணம் செய்தனர்.அந்த விமானம் புறப்பட்ட 2 நிமிடத்தில் திடீரென தரையில் விழுந்து நொறுங்கித் தீப்பிடித்தது.அது விழுந்த இடத்தில் வீடுகள் இருந்தன. எனவே 2 வீடுகள் இடிந்து சேதம் அடைந்தன.

இந்த விபத்தில் மேஜர் ஜெனரல் மரியோ புட்ஜ் உட்பட விமானத்தில் பயணம் செய்த 8 பேரும் தீயில் கருகி உயிரிழந்தனர். மேலும் பொதுமக்களில் ஒருவரும் பலியானார். இந்த விமானம் 35 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டது எனவும் இயந்திர கோளாறு காரணமாகவே விபத்தில் சிக்கியதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் விபத்து குறித்து விசாரணை நடக்கிறது. (2-6)

# இந்தியர் உட்பட 25 பேருடன்
# கொரிய கப்பல் கடத்தல்
## சோமாலியா கடற்கொள்ளையர் அட்டூழியம்


(டுபாய்)

தென் கொரியாவை சேர்ந்த ஒரு சரக்கு கப்பல் 2ஆயிரத்து 405 வாகனங்களை ஏற்றிக் கொண்டு சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டா் துறை முகத்திற்கு புறப்பட்டு சென்று கொண்டிருந்தது.

அதில் இந்தியர்கள் உட்பட 25 ஊழியர்கள் இருந்தனர். அவர்களில் 8 பேர் பல்கேரியர்கள், 10 பேர் உக்கிரேனை சேர்ந்தவர்கள் மற்றும் ருமேனியானிவை சேர்ந்தவர்களும் அடங்குவர் .

அரபிக்கடலில் சோமாலியா கடற்கரை பகுதியில் அக்கப்பல் வந்து கொண்டிருந்த வேளை அதைக் கடத்திய சோமாலிய கடற் கொள்ளையர்களை விடுவிக்க ரூ.78 கோடி பிணைத் தொகை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதமே இந்த கடத்தல் சம்பவம் நடந்ததாக பல்கேரியாவின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. கடத்தப்பட்ட சரக்கு கப்பல் தற்போது ஹோப்யோ நகரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (2-6)



ஒரே இடம் 2 பயன் பிரான்ஸில் உலக வெப்பமயமாதலைக் குறைக்கும் வகையில் சூரியன் மின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. மாட்பெல்லர் நகரின் ஒரு சூப்பர் மார்க்கட்.

# வீரப்பன் வாழ்ந்த காட்டில் பணமூடை?
## மலைக்கிராமங்களில் மீண்டும் பரபரப்பு

(மேட்டூர்)

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே தமிழக-கர்நாடக எல்லையில் சந்தனக் கடத்தல் வீரப்பன் பதுக்கி வைத்த பண மூட்டை கண்டெடுக்கப்பட்டது என்ற தகவலால் ஓய்ந்திருந்த மலைக் கிராமங்களில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அருகே உள்ள கோவிந்தப்பாடியில் உள்ளது தெற்கு ஊஞ்சக்கொரை. இது தமிழக- கர்நாடக எல்லையில் உள்ளது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இங்குள்ள விவசாய நிலத்தில் விளையாடச் சென்றனர் சங்கர், சக்திவேல், ஜெயசூர்யா ஆகிய மாணவர்கள்அப்போது விவசாய நிலத்தின் கல்கரையில் உள்ள பாறைச் சந்தில் ஒரு மூட்டையைக் கண்டனர்.

அதில் பணம் கட்டுக்கட்டாக இருந்ததாம். இதனை மூன்று பேரும் பிறகு எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறிவிட்டு வீடு திரும்பினராம். மறுநாள் சென்று பார்த்த போது பண மூட்டையைக் காணவில்லை. ஒரு மாணவன் மட்டும் தன் பெற்றோருடன் வந்து பணத்தை எடுத்துக் கொண்டதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக கொளத்தூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். வனத்துறை அதிகாரிகள் கன்னட நடிகர் ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் நாகப்பா ஆகியோரை கடத்திய நேரத்தில் கை மாறியதாக கூறப்படும் பணத்தை வீரப்பன் கும்பல் தங்கள் உறவினர்களுக்குதருவதாககொண்டுவந்து இங்கு மறைத்து வைத்திருக் கலாம். அதன் பிறகு இப்போது அந்தப் பணம் கிடைத் திருக்கலாம் என்று கிராமவாசிகள் கருதுகின் றனர்.

ஆனால் பணத்தை நேரில் பார்த்ததாகக் கருதப்படும் மாணவன் சக்திவேல் கூறியது, நாங்கள் விளையாடச் சென்ற போது சாக்கு மூட்டையில் கட்டுக்கட்டாக பணத்தைப் பார்த்தோம். மூவரும் சத்தியம் செய்து கொண்டு பிறகு பணத்தை எடுத்துக் கொள் ளலாம் என்று வந்து விட்டோம். மாலையில் சென்று பார்த்த போது பணத்தை யாரோ எடுத்துச் சென்று விட்டனர் என்றான். மாணவன் சங்கர் கூறும் போது, நான் பணத்தைப் பார்க்கவில்லை சக்திவேல் பார்த்ததாக கூறினான் என்றான். வீரப்பன் இறந்து 5 ஆண்டுகளுக்குப் பின் பணம் கிடைத்ததாகக் கூறப்படுவதால் ஓய்ந்திருந்த மலைக் கிராமங்களில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (2-6)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### நாகரீகம்

காலம்மாறா கோலங்கள் மாறி
கோட்டும் சூட்டும்
கழுத்தில் செயினும்
காதருகே செல்போனும்
தோளில் தோல்பையும்
வாசனை மணம் கமிழ
ஹீரோவில் ஹீரோவாய்
வலம் வந்து
கற்போடு சீதனம் வேண்டும்
கச்சிதமாய் பேரம் பேசும்
வாலிபனே...

நவீன யுகத்தில்
நாகரீகமாக தோன்றி
கலாசாரத்தை சீரழிக்கும்
தெருவோர காதல் லீலை
செல்போன் படம் பிடிப்பு
அபாச வார்த்தையால்
வெந்து துடிக்கும் மங்கையர்
மானமாய் வாழவிடு...

ஆ.இந்து
(வதிரி கரவெட்டி)

### பூகம்பம் நெஞ்சுக்குள்

மனதுக்குள் நகரும்
வேதனைப் படிமங்கள்
ஒன்றை ஒன்று முட்டி
மோதலிக்க உண்டாகும்
நெஞ்சப் பிளவுகளால்
வாழவேண்டும் என
என்னுமென்
கற்பனைக் கோட்டைகள்
தகர்ந்து சரிகின்றன

தென்அல்வை.அரிபுத்திரன்

### வாழ்வதா...! சாவதா...?

வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால்
அடிமையென்று
உள்ளம் உடைந்த வண்ணம்
ஊமையாகிப் போனேன்
ஊனமாகிய என்வாழ்வை எண்ணி..
செல்வக் குறைவினால்
செல்லாக்காசாகி
சொல்ல முடியாத சோகங்கள்
பனிமூட்டமாகிய
செல்வந்தர் செயலை எண்ணி
வாழ்வதா...? சாவதா...?

ராதிகா சிவபாலசிங்கம்
பொலிகண்டி.

### கோபம்

மறைத்துவைத்திருக்கின்றேன்
பனிமலைக்குள் - என்
சூரியனை எவரும்
காணாதபடி
இருந்தும் என்னைக் கண்டு
மிரள்கிறார்கள்
எல்லோரும்

சா.ரமேஸ்குமார்
மீசாலை கிழக்கு

### எமக்காகவே!

அகன்றது இருள்
புலர்ந்தது பொழுது
பாதம் பதித்தது மீள்குடியேற்றம்
உரித்துக்கள் இணைந்தது
குடிலை நிரப்பியது
குப்பி விளக்கொளி
தரணி எங்கும் பயிர்கள்
ஆழி மீன்பிடி
கடுகதி புகைவண்டி
தூரத்துப் பயணம்
பட்டாசு வேட்டோசை
மகிழ்ந்தது குழவிகள்.

கலைஞானி
பண்டத்தரிப்பு

### காதலிக்கு... ஹைக்கூ...

முன்பெல்லாம் நான்
கவிதை எழுதியபோது
என்ன இது?-என்று
கேட்டபலர்
உன்னைக் கண்டபின்
நான் எழுதுவதை எல்லாம்
கவிதை என்றனர்!

என்ன திருவிழா...?
என்று ஓடிவந்து
பார்த்தேன்!
தெருவால் நீ...
சென்று கொண்டிருந்தாய்

பேசாமல் தேர்தலில் போட்டியிடு
நீ... மௌனமாய்
உள்ளபோதே உன்பின்னால்
இவ்வளவு கூட்டம்!

என்னை கண்களால்
கைது செய்து- உன்
காதல் சிறைக்குள்
அடைத்துவிட்டு
டிஸ்ரப் பண்ணாமல் போடா...?
என்றால் எங்கேயடி போவது...?

பாறிவிழுந்த மரங்களின்
வேர்கள் சொல்கிறது
பூக்கும் காய்க்கும்
இலைக்கும் கிளைக்கும்
கிடைத்த வரம்
தனக்கும் வேண்டுமாம்...!
முறித்து அடுப்பெரி...!

அருள்செல்வம்
மண்கும்பான்

### காகித மனிதன்

நேர்மையான; உயர்
அதிகாரி - அவர்
சீருடையை மறைக்கும்
பதக்கங்களும் அதைத்தான்
படம்பிடித்துக் காட்டின ;
அதனால் என்ன?
மகனுடன் இருக்கையில்
அவரும் என் குழந்தைதான்.
நான்கு வயது மகனுடன்
நாள் பூராவும் விளையாடுவார்.
இன்று; மகன் வெளியில்
நான் தனிமையில்...
உடைந்த படத்தினுள்
பழுப்புநிற காகிதத்தில்
இருக்கின்றார் - அந்தக்
காகித மனுசன்.

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### உயர் பாதுகாப்பு வலயம்..

வல்லை வயல் வெளியினிலே
நெல்லு மணி ஓசையிலே
தொல்லையற்ற வாழ்வினை
தொலைத்துவிட்டு நிர்கதியாய்...
....நின்றோம்... நிற்கின்றோம்....?
கல்லும் முள்ளும் காவலரணும்
முள்ளுக் கம்பியும் மிதிவெடியும்
விதைத்து கிடக்கும் அவலமென்ன?
அதை இன்னமும்
முடக்கியிருக்கும் தேவையென்ன?

வி. காள்



சங்குநாதம்

## மௌனத்தின் தேடல் -05

### புரியாத மனசு

சிந்திக்கத்தெரியாத
சிறுபிள்ளை என்பதால்
சிரிக்கின்றாய்
இதைப்பார்த்து
சிந்திக்கத் தெரிந்தபின்
சிரிப்பாய் உனை எண்ணி

வி.பிரபகலா
சரவணை

### வார்த்தைகளில்லை

கபடமில்லா உள்ளங்கள்
கதைபேசும் கண்கள்
கவிதை கூறும் மழலைகள்
கண்டு எனை மறந்தேன்
கூற வார்த்தைகளில்லாது...

வா.நிலானியா
[வல்வெட்டித்துறை]

### மகிழ்ச்சி

குழந்தாய்...
யுத்த வேடர்களிடம்
அகப்பட்ட வெண்புறா
வெள்ளை உள்ளம் கொண்ட
உன் கரம் சேர்ந்ததில்
உனக்கும் மகிழ்ச்சி
அதற்கோ பெருமகிழ்ச்சி

ஜனா
(உடுப்பிட்டி)

### யாருக்கு தூது?

பால்மணம் மாறா
மழலைச் செல்வமே!
அன்பே உருவாய் அமர்ந்து
அன்பே உருவமான
வெண்புறாவை
பூப்போன்ற கைகளினால்
யாருக்கு தூதுவிட உத்தேசம்

கல்வயல்
ந.பிரதீபன்

### ஆவல்

சமாதானத்தின் கதவுகள்
மூடிவிடாத நிலையில்
உரமேற்றும் நடவடிக்கை தான்
உன் நிலையோ

எம்.கார்த்தீபன்
(மீசாலை கிழக்கு)

### புதைகுழியில் சமாதானம்

மழலையே உன்கையில் உள்ளது
சமாதானப் புறாவா அல்லது மாயப் புறாவா
ஒனெனில் எமது நாட்டில்
எத்தனையோ புறாக்கள் பறக்க விடப்பட்டன
ஆனாலும் எங்களுக்கு சிறைக்கூடங்களும்
சித்திரவதை முகாம்களும்தான் புதிது புதிதாய்
அறிமுகமாகின்றன!

எம். சந்திரகலா
(யோகபுரம்)

### மரணங்கள் உயிர்க்காது

எப்போதோ செத்துவிட்ட
சமாதானம்
இப்போது - நீ
பொத்திவைத்திருக்கும்
வெண்புறாவால்
எப்படி மீண்டுவரும்

திருமதி. கி. நவதர்சினி
(வயாவிளான்)

### சந்ததி வாழும் சிரி!

சாத்திய பூவுனக்கு
சாந்தி தரும்
ஏந்திய புறா என்றும்
ஏக்கம் போக்கும்
சிரி! சிறுசே! சிரி!
சந்ததி வாழும் சிரி!

பொலிகை
மூனா.மாலினி

### அன்றும் இன்றும்

குழந்தாயே! உன் அழகு வதனம்
எனை மயக்குதடா
ஆனாலும் என்னுலகம்
வேதனை தருகுதடா
உன்னைப்போல் அன்றுநான்
மண்ணில் பூத்தவேளை
அணைத்து வாரி அனைவரும்
முத்தமழை பொழிந்தனர் – இன்று
அன்புத் தொல்லை செய்வதற்கு
யாரும் அற்ற நிலையில்
சிறையின் கூண்டினிலே
வனவாசம் தொடர்கிறது

மருதங்கேணியூரான்

### கெஞ்சுவது என்ன?

பஞ்சு போன்ற—உன்
பிஞ்சு மனம்
கொஞ்சும் புறாவிடம்
கெஞ்சுவது என்ன...?
சமாதானத்தையா...?

பா.சத்யா
(மீசாலை)

### தவிப்பு

வெளியுலகம் தேவையென்று
அறிந்திருந்த போதும்
வேதனையே கொடிமையுரு
கொள்கிறதே வாழ்வில்
குழந்தைமனம் படைத்த நாம்
குழறி தினம் சாகிறோம்
சமாதானப் புறா வாழ்வு
தமிழனுக்கு இல்லையே!

வே.அகிலேஸ்வரா
(நலன்புரி நிலையம்)

### எனக்கும் தெரியுமா?

எனக்கு(ம்) தெரியுமா? இன்றைய
அரசியல் குப்பை
சிரிப்புடன் வளரும் என்னை
சிதைத்து விடாதீர்
சீரழிந்த அரசியலுக்குள் – நீங்கள்
மட்டும் செல்லுங்கள்
சிறப்பாய் நாம் வாழ – இனியாவது
எமக்கு வழிவிடுங்கள்

ஆழியூர் தமிழன்
[யாழ். பல்கலைக்கழகம்]

### பிஞ்சு உள்ளம்!

கள்ளம் இல்லா
பிஞ்சு உள்ளம்!
சமாதானப் பறவையை
தன் கையில்
ஏந்தி மகிழ்கின்றது

சி.கனிமொழி
(பழைய பூங்கா வீதி)

### சமாதானத்தை வேண்டி

காலம் செய்யும்
கோலங்களால் - இன்று
பென்சில் பிடிக்க வேண்டிய
கரங்கள்
சமாதானத்தை வேண்டி
உனை ஏந்தி நிற்கின்றன

சி.நிர்மலா
(தொண்டைமானாறு)

### புன்னகை

புத்தி தெரியாத
பருவம் என்பதால்
புன்னகையால்
பூரிக்கிறாய் - பல
புன்னகைவான்களை
பாதுகாப்புவலயத்தில்
புதைத்தவர்கள் இன்று
புலம்புகிறார்கள் உன்
புன்னகையைப் பார்த்து

நிலாமதி
(ந.பு.நிலையம் அல்லாரை)

### ஏங்குகின்றோம்

சமாதான பறவையை
நீ சுமந்து மகிழ்கிறாய்
முள் வேலிக்குள்
நாம் இருந்து - எம்
இருப்பிற்கு ஏங்குகின்றோம்

சி.சிறிசுதா
(சுண்டுக்குளி)

## மௌனத்தின் தேடல்- 06




அன்பு வாசகர்களே !
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.02.2010 ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.
-ஆசிரியர் -

## சினி தகவல்கள்

# சிம்பு புது அவதாரம்




சிம்புன்னாலே வம்புன்னு சொல்கிற அளவுக்கு என்னைப்பத்தி நிறைய வதந்திகள். அதையெல்லாம் அமைதியாக பார்த்துக்கொண்டிருக்கிறேன். துடுக்குத்தனமான வேடங்களில் நடித்ததால் மற்றவர்கள் சொல்வதெல்லாம் எனக்குப் பொருத்தமாக அமைந்துவிட்டது என்கிறார் சிம்பு.

அரசியலுக்கு சிம்பு வந்துவிடுவார் என்றும் ஒரு கிசு கிசு வலம் வருகிறது.

நடிகனாக நல்லதொரு இடத்தை பிடித்த பின்னர் அரசியல் பற்றி யோசிப்பேன். இதுவரை பார்த்த சிம்புவை இனி புதிய கோணத்தில் பார்க்கப் போகிறீர்கள். அதற்கு முதல் தொடக்கமாக கவுதம் மேனனின் "விண்ணைத் தாண்டி வருவாயா இருக்கும்" என்றார்.

# குப்பத்து இளைஞன் வேடத்தில் ஸ்ரீகாந்த்



"துரோகி" யில் குப்பத்து இளைஞன் வேடத்தில் நடிக்கிறேன் என்றார் ஸ்ரீகாந்த். இதுபற்றி அவர் கூறியதாவது, மணிரத்தினத்தின் அசோசியேட் சுதா இயக்கும் படம் " துரோகி" வட சென்னையை சுற்றி நடக்கிற கதையிது. இதில் குப்பத்து இளைஞனாக நடிக்கிறேன். நானும் விஷ்ணுவும் இதில் நண்பர்கள். எனக்கு ஜோடியாக பூர்ணா நடிக்கிறார். விஷ்ணு ஜோடியாக பூனம் பஜ்வா.

பூஜா முக்கிய வேடத்தில் நடிக்கிறார் .தியாகராஜன்,எஸ்.பி.சரன் ஆகியோரும் நடிக்கின்றனர். பட ஷூட்டிங் முடிந்துவிட்டது. டப்பிங்கும் பேசிவிட்டேன். விரைவில் ஓடியோ ரிலீஸ் நடைபெறவுள்ளது.

"ரசிக்கும் சீமானே" படம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் ரிலீசாக வேண்டியது. பல்வேறு பிரச்சினைகளால் அப்படம் நிற்கிறது. தெலுங்கில் கடைசியாக "போலீஸ் போலீஸ்" படத்தில் நடித்தேன். தெலுங்கானா பிரச்சினையால் இப்படம் ரிலீசாகவில்லை. விரைவில் தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் இப்படம் ரிலீசாகும். இவ்வாறு ஸ்ரீகாந்த் கூறினார்.

# 'கோ' படத்தில் 'ஜீவா' ஹீரோ?



"அயன்" வெற்றி படத்திற்கு பின்னர் கே.வி.ஆனந்த் இயக்கும் படம் 'கோ'.

"கோ" படத்திலிருந்து சிம்பு திடீரென விலகியதை அடுத்து, டைரக்டர் கே.வி.ஆனந்த் நடிகர் ஜீவாவை அணுகியுள்ளதாகத் தெரிகிறது. ஏற்கனவே ஜீவா கையில் சிங்கம் புலி, கச்சேரி ஆரம்பம் என இரண்டு படங்களில் பிசியாக இருக்கிறார். 'ஜீவா' பிசியாக இருந்தாலும் அவரை நடிக்க வைக்க கே.வி. ஆனந்த் முயற்சிகள் எடுத்து வருகிறார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

ராதாவின் மகள் "கார்த்திகா" முதன் முறையாக ஹீரோயினாக நடிக்கும் இப்படத்தில், "அஞ்சாதே" புகழ் அஜ்மல் உட்பட பல முன்னணி நடிகர்கள் நடிக்க, ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

படத்தில் வரும் பாட்டு மற்றும் சில பகுதிகளை படம் பிடிப்பதற்காக "கோ" படக் குழுவினர் சீனா சென்றுள்ளனர்.

# தனுஷின் அடுத்த படமும் ரீ-மேக்தான்!



நடிகர் தனுஷ் அடுத்து நடிக்கவிருக்கும் படம் கன்னட படத்தின் ரீ-மேக் என்ற தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் தனுஷ் அடுத்தடுத்து ரீ-மேக் படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். பரட்டை என்கிற அழகுசுந்தரம், யாரடி நீ மோகினி, குட்டி என தனுஷின் ரீ-மேக் பட்டியல் தொடர்கிறது.

பரட்டை என்கிற அழகுசுந்தரம் படம் ஜோகி என்ற கன்னட படத்தின் ரீ-மேக். சமீபத்தில் வெளியான குட்டி படம் தெலுங்கில் வெளியான சூப்பர் ஹிட் படமான ஆர்யாவின் ரீ-மேக். இந்நிலையில் தற்போது கன்னடத்தில் வெளியாகி வெற்றி பெற்ற துனியா என்ற படத்தின் ரீ-மேக்கில் நடிக்கப் போகிறார் தனுஷ். கொப்பியடித்துக் கொப்பியடித்தே தமிழ் சினிமாவை ஒரு கலக்கு கலக்கி விடுவார் போல இருக்கே!.

# அசல்



நடிகர்கள் :அஜித் (இரட்டைவேடம்), பாவனா,சமீரா ரெட்டி, சம்பத் ,பிரபு,ராஜீவ் கிருஷ்ணா,சுரேஷ்
ஒளிப்பதிவு :- பிரசாந்த் டி மாஷாலே
இசை: பரத்வாஜ்.
கதை,திரைக்கதை வசனம்: சரண்,யூகி,சேது,அஜித்
இணை இயக்கம்: அஜித்
இயக்கம்: சரண்
தயாரிப்பு: சிவாஜி பிலிம்ஸ் பிரபு,ராம்குமார்
பி.ஆர்.ஓ: டைமண்ட் பாபு

பங்காளிச் சண்டை என்ற,தலைமுறை தலைமுறையாக நாம் பார்த்துப் பழக்கப்பட்ட கதைக்கு ஆயுத வியாபாரம் அண்டர் தொன் ,பிரான்ஸ் லொக்கேஷன் என முடிந்த வரை,பளபளப்பேற்றி அசலாகக் காட்ட முயற்சித்திருக்கிறார்கள்.

ஆயுதவியாபாரி, நிழல் உலக தாதா அஜித்துக்கு மூன்று மகன்கள்... சம்பத், ராஜீவ் கிருஷ்ணா இருவரும் சட்டபூர்வ மனைவிக்குப் பிறந்தவர்கள். இரண்டாம் தாரத்துக்குப் பிறந்தவர் ஜூனியர் அஜித். தனக்குப் பின்னர் தனது வர்த்தக சாம்ராஜ்யத்துக்கு வாரிசா அசல் மனைவிக்குப் பிறந்த வர்களை விட்டு விட்டு, இரண்டாம் தார மகன் அஜித்தை அறிவித்திருக்கிறார்.

இதில் கோபமடைந்த அசல் வாரிசுகள் தந்தை அஜித்தைக்கொன்று விடுகிறார்கள். இது தெரியாத மகன் அஜித் அவர்களுக்கே உதவப்போகிறார். அங்கே அவரையும்கொல்ல முயற் சிக்கிறார்கள். அதிலிருந்து தப்பி வரும் அஜித் எப்படி பங்காளிச் சண்டையிலிருந்து மீள்கிறார். தன்னை காதலிக்கும் சமீரா, பாவனா இருவரில் யாரைக் கைப்பிடிகிறார் என்பது மீதிக்கதை.

இந்தப் படத்தின் முக்கிய அம்சம் சந்தேகமில்லாமல் அஜித்தான். அசத்தலான தோற்றம், அதைவிட அசத்தலாக சண்டைக் காட்சிகளில் ஜொலிக்கிறார் மனிதர். குறிப்பாகஇடைவேளைக்கு முந்தைய அந்த இரு சண்டைக் காட்சிகளிலும் அப்படி ஒரு திகில்.

வயதான அஜித் வரும் காட்சிகள் மிகக்குறைவு.அதில் பெரிதாக கவர ஸ்கோப் இல்லை மூத்த அஜித்துக்கு. இரண்டு அஜித்துக்கும் தோற்றத்தில், உடையில் கூட பெரிய மாற்றமில்லை. இருவரையும் வேறுபடுத்திப் பார்க்க ஒரு வித்தியாசம் இருக்கிறது. மூத்தவருக்கு நரைத்த முடி. இளையவருக்கு அது இல்லை!!

பாவனா,சமீரா இருவருக்குமே அஜித்தை காதலிக்கும் வேலை. ஆனால் சமீராவை காட்டிய விதம் மகா சொதப்பல். மிகவும் வயதான மாதிரி ஒரு தோற்றம். இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.வில்லன்களில் அசத்தலாய் வருகிறா கொலி டோர்ஜி. ஷெட்டி என்ற பாத்திரத்தில் வரும் இவர் அலட்டிக் கொள்ளாமல் மிரட்டுகிறார்.

சம்பத் மற்றும் ராஜீவ் கிருஷ்ணாவும் கொடுத்த பங்கை நிறைவாகச் செய்திருக்கிறார்கள். படம் முழுக்க கிரிமினல் காரியங்களுக்கு உடந்தையாக வந்து கடைசிக் காட்சிக்கு முந்திய காட்சியில் திருந்தும் வில்லனாக வரும் பிரெஞ்ச் போலீஸ் சுரேஷுக்கு இது மறுபிரவேச வாய்ப்பு பயன்படுத்திக் கொண்டுள்ளார்.பிரதீப் ராவத்தும் படத்தில் உண்டு.



இந்த நட்சத்திர கும்பலில் காணாமல் போயிருப்பவர் பிரபு. சீனியர் அஜித்தின் நண்பராக வருகிறார். அல்டிமேட் ஸ்டார் பட்டத்தை விட்டொழித்த அஜித்தை, படம் முழுக்க சதா தலை தலை எனறு புகழ்ந்துகொண்டே இருக்கிறது ஒரு கூட்டம். அதேபோல பில்லாவில் ஆரம்பித்த " கோட் -சூட்ரேம்ப் வாக்கை" இதிலும் தொடர்கிறார் அஜித். இந்த இரண்டையும் தற்காலிகமாகவாவது தலைமுழுக முயற்சிக்கலாம் " தல" ராஜீவை காப்பாற்றப் போகும் அஜித் சுடப்பட்டு ஆற்றில் விழுகிறார். அதன் பின்னர் மீண்டும் பாரிஸில் அதகளம் பண்ணுகிறார். லொஜிக் கெல்லாம் தேடமுயற்சிக்கக்கூடாது.

இடைவேளையின்போதே கதையின் போக்கு, அடுத்தடுத்த நகர்வுகள் தெரிந்து விடுவதால் ஒரு தொய்வு விழுகிறது. ஆனால் அதை யூகிசேது அண்ட் கோ சற்றே சரி கட்டுகிறது, தங்கள் காமெடியால்.படத்தின் முக்கிய ப்ளஸ்... நீளம். 2மணி 5நிமிடம் தான் படம். காட்சிகளின் வேகமான நகர்வில் கதையில் உள்ள மைனஸ்கள் தெரிவதில்லை.

பரத்வாஜ் இசையில் டொட்டொடய்ங் பாட்டு கலகல...படம் முடிந்து வெளியில் வரும் போது எல்லோர் வாயிலும் இந்தப் பாட்டு நீக்கமற நிறைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. மற்ற பாடல்கள், பின்னணி இசை பெரிதாய் கவரவில்லை. பிரசாந்தின் ஒளிப்பதிவு அசத்தல். படத்துக்குப் பொருத்தமான பின்னணியை அதன் நோக்கம் மாறாமல் தந்திருக்கிறார்.ஆனால் மலேஷியாவில் .மும்பையைக் காட்ட முயன்றதைத் தவிர்த்திருக்கலாம்.

காட்சிகளைப் பார்த்துப்பார்த்து இழைத்திருக்கிறார்கள் இயக்குநர்கள் சரணும் அஜித்தும்.அதில் காட்டிய அக்கறையை ஒரு வெயிட்டான கதையைப் பிடிப்பதிலும் காட்டியிருக்கலாம். சில காட்சிகள்,வட்டாரம் மற்றும் அட்டகாசத்தைத நினைவூட்டுவதை யும் தவிர்த்திருக்கலாம் சரண்.

அஜித் ரசிகர்களுக்கு (மட்டும்!) இது "அசல் விருந்து"!

# எனக்கு அரசியல் வேண்டாம்! அஜித்




சினிமா நட்சத்திரங்களில் அஜித் ரொம்பவே வித்தியாசமானவர். தான் நடித்த படம் வெளியாவதற்கு முன்பாக பத்திரிகையாளர்களை சந்தித்து அந்தப் படம் குறித்து பேசுவது அஜித்தின் தனித்துவங்களில் ஒன்று.அசல் படம் ரிலீஸ் ஆக விருப்பதையொட்டி சென்னை அடையாறில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் பத்திரிகையாளர்களை சந்தித்தார் அஜித். அப்போது அவர் அசல் படம் குறித்து நிருபர்களிடம் ரிலாக்ஸாக பேசினார்.


கேள்வி-பதிலுக்கு என நேரம் ஒதுக்காவிட்டாலும் நிருபர்கள் அஜித்திடம் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தனர். அனைத்திற்கும் அவர் சிரித்துக் கொண்டே பதில் அளித்தார். அரசியல் பற்றிக் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த அஜித்,

என்படங்களை அரசியல்வாதிகளும் பார்க்க வேண்டும். அதனால் தான் எனக்கு அரசியல் வேண்டாம் என சொல்கிறேன். ஜெயிச்சவங்க சந்தோஷத்தைக் கொண்டாடுறதுக்காக என் படத்தைப் பார்க்கனும். தோற்றவங்க ஆறுதலுக்காக என் படத்தை பார்க்கனும் என்றார்.அல்டிமேட் ஸ்டார் பட்டம் குறித்த கேள்விக்கு பதில் அளிக்கையில், ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் எவ்வளவோ மாற்றங்கள் வரும். இன்றைக்கு இருக்கின்ற சினிமா ரசிகர்கள் ரொம்பவே மாறியிருக்கிறார்கள். அதனால் தான் இனிமேலும் அல்டிமேட் ஸ்ரார் பட்டம் போட வேண்டுமா என யோசித்தேன். வேண்டாம் என முடிவு பண்ணிட்டேன் என்றார்.

அசல் படத்தில் இணை இயக்குனராக இருந்தது பற்றிய கேள்விக்கு எதிர்காலத்தில் படம் இயக்கும் ஆசை இருக்கிறது. ஆனால் அதை உடனடியாக செய்துவிடமாட்டேன். நிதானமாக இன்னும் பல அனுபவங்களை சேர்த்துக் கொண்டு படம் இயக்குவேன் என்றார்.




# படத்தில் நான் கோமாளி நிஜத்தில் ஏமாளி- வடிவேலு குமுறல்



எல்லா மக்களையும் சிரிக்க வைக்கிற எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி நடிப்புத் தொழிலை விட்டு விரட்டுவதற்கு சிங்கமுத்து சதி செய்து வருகிறார் என்று கூறிய நடிகர் வடிவேலு படத்தில் நான் கோமாளி நிஜத்தில் நான் ஒரு ஏமாளி என்றார்.

காமெடி நடிகர் வடிவேலுவுடன் பல வேடங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்தவர் சிங்கமுத்து.இவர் மீது நிலமோசடி செய்ததாக நடிகர் வடிவேலு சென்னை பொலிஸ் ஆணையர் ராஜேந்திரனிடம் புகார் கொடுத்துள்ளார்.அதன் பின் செய்தியாளர்களிடம் பேசிய வடிவேலு என்னிடம் நடிப்பு சான்ஸ் கேட்டு வந்தவர் சிங்கமுத்து. எனக்கு ஜாதகம் பார்க்கத் தெரியும், ரியல் எஸ்டேட் தொழில் தெரியும் என்றெல்லாம் கூறினார்.கழுத்தில் எப்பொழுதும் துளசி மாலை அணிந்திருப்பார்.அவருடைய தோற்றத்தையும் பேச்சுத் திறமையையும் நம்பி நான் ஏமாந்து போனேன்.

அப்போது நான் தேவர் மகன் உட்பட பல படங்களில் இரவு பகலாக பிசியாக நடித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் தான் சிங்கமுத்து எனக்கு அறிமுகமானார்.என்னால் திரையுலகுக்கு அடையாளம் காட்டப்பட்ட சிங்கமுத்து ,எனது இடைவெளி இல்லாத உழைப்பை பயன்படுத்தி, எனக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவர் போல நடித்து ,என்னை மோசடி செய்யும் எண்ணத்தோடு பல விதங்களிலும் ஏமாற்றி விட்டார்.மோசடியாக ஆவணங்கள் தயாரித்தது பற்றியும்,நான் ஏமாற்றப்பட்ட விதம் குறித்து அவர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து வருகிறேன்.இதை தெரிந்து, அந்த நம்பிக்கை மோசடி செய்த சிங்கமுத்து மற்றும் பின்னணியில் உள்ளவர்கள் என்ன செய்வது என்று புரியாமல் எனக்கு பல விடயங்களிலும் இடையூறு செய்கிறார்கள்.

எனது அலுவலகத்தில் உள்ளவர்களைப் போனில் மிரட்டுகிறார்கள். எனது மைத்துனரை மிரட்டி ஊருக்கே அனுப்பிவிட்டார்கள்.எனக்கும் கொலை மிரட்டல் விடுத்தார் என நடிகர் வடிவேலு கூறினார்.

# ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஜெக்சான் அந்தனி நியமனம்

(கொழும்பு)

தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஜெக்சன் அந்தனி நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலில் போட்டியிட தான் விரும்பவில்லை எனவும் அதற்கு தேவையான பெருந்தொகைப் பணம் தன்னிடம் இல்லை எனவும் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது பதவியை வழங்கினால் அதனை பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் ஜெக்சான் அந்தனி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே அவரை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். இதனடிப்படையில் அடுத்த வாரம் அந்த பதவியில் அமர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அமைச்சர்கள் குறித்து நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி நிலைமை காணப்படுவதால் பொதுத் தேர்தலில் நடிகர், நடிகைகளை களமிறக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளதா தெரிகிறது. (2-6)

## பொதுத்தேர்தலில் களனித்தொகுதியில் போட்டியிடுவதில் மும்முனைப் போட்டி ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் களனி தொகுதியில் போட்டியிடுவது தொடர்பில் அமைச்சர் மேர்வின் சில்வா ,நாமல் ராஜபக்ஷ மற்றும் நடிகை மாலினி பொன்சேகா ஆகியோர் இடையில் மும்முனைப் போட்டி ஆரம்பமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமையில் மேர்வின் சில்வாவுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து ஜனாதிபதி தனது ரஷ்ய பயணத்தின் பின்னர் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக அலரிமாளிகைத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை எதிர்வரும் வாரம் நடைபெறும் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவிப்பு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டாம் என ஜனாதிபதி மேர்வின் சில்வாவுக்கு அறிவித்துள்ளார் என்றும் இதற்கமைய அமைச்சர் வேட்பு மனுச்சபையிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய தில்லை எனக் கூறி மேர்வின் சில்வாவை தேற்றவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (2-6)

## யாழ்ப்பாண கோட்டையை புனரமைக்க நெதர்லாந்து அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

யாழ்ப்பாணக் கோட்டையை புனரமைக்க நெதர்லாந்து அரசாங்கம் 61.1 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனை தவிர மேலதிக நிதியான 42.4 மில்லியன் ரூபாய்களை இலங்கை அரசாங்கம் ஒதுக்கீடு செய்கிறது.

இந்த தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதன்படி முதலாவது வேலைத்திட்டம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலுமான காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெதர்லாந்து அரசாங்கம் மேலும் பல்வேறு திட்டங்களுக்காக இலங்கை நிதியுதவியை வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதில் திருகோணமலையில் உள்ள பழைய டச்சு கடற்படை ஆணையாளர் வீடும் உள்ளடங்கவுள்ளது.

இதற்காக நெதர்லாந்து அரசாங்கம் 75 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது.(2-6)

## ஆசிய பிராந்திய நாடுகளின் கடற்படையினர் கூட்டாக பயிற்சி

(கொழும்பு)

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் கடற்படையினரை உள்ளடக்கிய 11 நாடுகளின் கடற்படையினர் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் கடற்படை பயிற்சிகளை வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

மிலான் 2010 கடற்படை பயிற்சிகள் என அழைக்கப்படும் இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் கடற்படை பயிற்சியின் ஏழாவது கட்டம் இதுவாகும். இந்த நடவடிக்கைக்கு இந்தியா தலைமை தாங்கி வருகின்றது.

நான்கு நாட்கள் நடைபெறும் மிலான் 2010 கடற்படை கூட்டுப்பயிற்சிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


அத்துடன் சிங்கப்பூர்,அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், இந்தோனேசியா, மலேசியா, பர்மா, புறூனை, பிலிப்பைன்ஸ், வியட்னாம், தாய்லாந்து ஆகிய நாடுகளின் கடற்படை கப்பல்களும் படையினரும் அந்தமான் தீவுகளில் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாடுகளின் எல்லைகளை பாதுகாப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் எனினும் ஏனைய நாடுகளுடன் கடற்படை ஒத்துழைப்புக்களை மேற்கொள்வதற்கு இந்தப் பயிற்சி நடவடிக்கையை இந்தியா பயன்படுத்தி வருகின்றது.

1995ஆம் ஆண்டு இந்த பயிற்சி திட்டத்தை ஆரம்பித்த இந்தியா தற்போது தனது கடற்படை பலத்தையும் அதிகரித்து வருகின்றது.

உலகிலேயே ஆறாவது பெரிய கடற்படையை கொண்டுள்ள இந்தியாவின் கடற்படை 155 கப்பல்களையும் ஆயிரம் படையினரையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## யோசிதராஜபக்ஷவையும் கட்டாய ஓய்வில் அனுப்ப வேண்டும்-ஐ.தே.க.கோரிக்கை



(கொழும்பு)

அரசியலில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச் சாட்டின் அடிப்படையில் 14 இராணுவ அதிகாரிகளுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதியின் மகனான கடற் படை அதிகாரி யோசித ராஜபக்ஷவும் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய யோசித அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்கள் உள்ளன. இந்த நிலையில் அவரும் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஓய்வில் அனுப்பப்பட்ட இராணுவ அதிகாரிகள் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதர வளித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் சுமார் 30 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு செயலாளரின் ஆணைப்படி 30நாள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தயாசிறி ஜயசேகரவின் குற்றச்சாட்டை மறுத்துள்ள தேசியப்பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப் பாளர் லக்ஸ்மன் ஹுலுக்கல்ல யோசித ராஜ பக்ஷ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனக் குறிப்பிட்டார்.

எனினும் ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர் என்ற வகையில் சில தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவர் பங்கேற்றதாக அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## முரண்பாடுடனான முன்னாள் நீதியரசரின் தீர்ப்புகள் ஆராயப்படவேண்டியவை

### அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார தெரிவிப்பு

(கொழும்பு)

இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கை பிரிக்க வேண்டுமென அன்று தீர்ப்பு வழங்கிய முன்னாள் பிரதம நீதியரசர் இன்று வடக்கு கிழக்கு மீள இணைக்கப்பட வேண்டுமென அரசியல் மேடைகளில் தெரிவித்துள்ளார். இதற்கு என்ன காரணம் எனக் கேள்வி எழுப்பிய அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார

முரண்பாடுகளுடனான முன்னாள் பிரதம நீதியரசரின் தீர்ப்புக்களை ஆராய விசாரணை ஆணைக்குழுவை ஜனாதிபதி அமைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசர காலச் சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தேச நிர்மாண அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னாள் பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்புகளில் சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் தீர்ப்பை வழங்கியவர் இன்று ஓய்வு பெற்றதும் ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவின் மேடையில் ஏறி மீண்டும் வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டு மெனக் கூறித் திரிகிறார்.

அத்தோடு எனக்கு எதிராகப் பொய் வழக்கொன்று தயாகமகே என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வாறு எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த நபருடன் அவர் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்துள்ளார். இதற்கு அமைவாகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)


வணிகத் துறையின் முதலாவது
பேராசிரியர் க.தேவராஜா
அவர்களின்
பாராட்டு விழா



இடம்:- இணுவில் பொது நூலக கலாசார மண்டபம்
காலம்:- 07.02.2010 (3 மணி)
தலைவர்:- உயர்திரு.அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் -யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்)

பேராசிரியரை வாழ்த்துவோர்

1. லிங்கம் தொலைத் தொடர்பு நிலையம், பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.
2. லிங்கம் ஸ்ரோர், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
3. Lathu Digital Video, K.K.S. Road, Inuvil.
4. அருணகிரி ஸ்ரோர்ஸ், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில்.
5. ஐங்கரன் பான்சி, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
6. சுதன் பேக்ஹவுஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
7. ஐங்கரன் ஸ்ரோர்ஸ், தாவடி வடக்கு, கொக்குவில்.
8. விக்கினா தொலைத்தொடர்பு நிலையம், கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
9. விதுசா சுப்பர் மார்க்கெற், இணுவில் சந்தி, கே.கே.எஸ். வீதி, இணுவில்.
10. Modern PCS.Systems, No.18,K.K.S. Road,Chunnakam.

(C-4396)

# உலக பொருளாதார மந்த நிலையிலும் இல.வங்கித்துறை சிறப்பான வளர்ச்சி


இலங்கை வங்கி தலைமையகம்

## 2009-ல் கடன் மீள்செலுத்துகையும் அதிகரிப்பு

(கொழும்பு)

உலகப் பொருளாதார மந்த நிலையின் மத்தியிலும் இலங்கையின் வங்கித்துறை கடந்த ஆண்டில் நல்ல அடைவைக் கண்டுள்ளது. மத்திய வங்கியின் சீரிய வழிகாட்டுதலின் மூலமே ,உலகப் பொருளாதார நெருக்கடி கால கட்டத்தில் இலங்கையின் வங்கித்துறை பெரிய பாதிப்பை அடையாமல் நல்ல பெறுபேற்றைக் கண்டுள்ளதாக மத்திய வங்கியின் மூத்த பெண் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் வங்கி ,காப்புறுதி ,றியல் எஸ்ரேட் துறைகள் 9 வீதப் பங்களிப்பைக் கொண்டுள்ளன.

குறித்த கால கட்டத்தில் வங்கிகளை உள் மற்றும் வெளிக் காரணிகளின் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்க முடிந்ததாகவும்,பொருளாதார மந்த நிலையின் மத்தியிலும் கடன்களுக்கான வட்டி வீதங்கள் மத்திய வங்கியால் குறைக்கப்பட்டன.

இதேவேளை கடன் மீள் செலுத்துகையும் கடந்த ஆண்டு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சாதகமான சூழ்நிலை நிலவுவதால் மேலும் பொருளாதார செயற்பாடுகளை அதிகரிக்க முடியும்.

நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிக் கிளைகளை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திறக்க மத்திய வங்கி அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே 12 இற்கும் மேற்பட்ட வங்கிகள் வடக்கில் செயற்படுகின்றன. மேலும் சில வங்கிகள் வடக்கில் தமது செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதன் மூலம் நாடு பூராகவும் மற்றும் கிராமப் புறங்களுக்கும் வங்கி நடவடிக்கைகளை விஸ்தரிக்க வங்கிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது வங்கிகளுக்கிடையில் ஆரோக்கியமான போட்டிக்கு வழி வகுத்துள்ளது.

இது இத்துறையில் உள்ள அனைவருக்கும் நன்மையளிக்கக் கூடியதே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


எச்.என்.பி.யின் தலைமையகம்




## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.84 | 115.43 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 178.75 | 182.41 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 155.31 | 159.01 |
| சுவிஸ் பிராங் | 105.36 | 108.64 |
| கனேடிய டொலர் | 105.37 | 108.79 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.08 | 101.04 |
| சிங்கப்பூர் டெர்லர் | 79.81 | 81.70 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.21 | |

# புலம்பெயர் சமூகத்தை வடக்கில் முதலிடுமாறு வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது அமைதி நிலவுவதால் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் வடக்கில் முதலீட்டை மேற்கொள்ள வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமைச்சர், வெளிவிவகார அமைச்சின் காரியாலயம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவது குறித்து நேரில் ஆராய்ந்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது,

முழு வட பகுதியும் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ளும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தில் வெளிவிவகார அமைச்சின் கவுன்சில் அலுவலகத்தை அமைக்க முடிவெடுத்தோம்.

இது புலம்பெயர் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த வழிவகுப்பதுடன் ,மக்களுக்கு சிரமங்களைக் குறைக்கும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசாங்கம் சுற்றுலா ,மீன்படி, விவசாயம் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்ய அடையாளம் கண்டுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்.

யாழ்ப்பாணம் எதிர்காலத்தில் வெளியுலகத்தொடர்பு மற்றும் தொழில் நுட்ப மையமாக உருவாகும்.

வட் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இதன் மூலம் புலம் பெயர் தமிழ் சமுதாயம் மட்டுமல்ல வேறு நாடுகளில் இருந்தும் முதலீட்டை வரவழைக்க முடியும்.



இந்த நடவடிக்கை தேசிய பொருளாதாரத்திற்கு வலுச் சேர்க்கும். கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தால் யாழ்ப்பாணம் மற்றும் வட பகுதி மாவட்டங்கள் அபிவிருத்தி செய்யப் படவில்லை.

தற்போது உருவாகியுள்ள சூழலால் அபிவிருத்திக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு தமிழ் புலம்பெயர் சமூகம் உதவவேண்டும். இதன் மூலம் அவர்களும் அபிவிருத்தியில் பங்குதாரர்களாக முடியும் எனவும் வெளிவிகார அமைச்சர் றோகித போகொல்லாகம யாழ்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தெரிவித்தார்.

## வர்த்தக செய்தித் துளிகள்

### எச்.எஸ்.பி.சி.யின் ஆசிய-பசிபிக் தலைவராக அனிதா நியமனம்



எச்.எஸ்.பி.சி. வங்கி, ஆசிய பசுபிக் பிராந்திய தலைவராக அனிதா பங்கை உடனடியாக அமுலுக்குவரும்வகையில் நியமித்துள்ளது. இதேபோல் 2-ம்மட்டத் தலைமைப் பதவிகளிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை எச்.எஸ்.பி.சி. வங்கி இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் கிளையொன்றை திறக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மத்தியவங்கியின் முன்னாள் ஆளுநர் கருணாதிலக மறைவு



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் டாக்டர் எச்.என்.எஸ். கருணாதிலக (வயது 80)கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார். 35 ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய வங்கியில் பல பதவிகளை வகித்தஇவர், ஒரு பொருளாதார அறிஞராவார். 1975இல் மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பணிப்பாளராகவும் 1978இல் பிரதி ஆளுநராகவும், 1988இல் ஆளுநராகவும் நியமனம் பெற்றார்.

# விமானப்பயணிகள் கையாளல் திறனை இரண்டு மடங்கு அதிகரிக்கத் திட்டம்




(கொழும்பு)

கொழும்பு விமான நிலையத்தில் 30 தொடக்கம் 40 பில்லியன் ரூபாய் செலவில் பயணிகள் கையாளல் திறனை இரண்டு மடங்காக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக விமானப் போக்குவரத்துத்துறைத் திட்டப் பொறியியலாளர் எஸ். எம்.ஆர். றபீக் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தற்போது ஆண்டுக்கு 6 மில்லியனாக உள்ள பயணிகள் கையாளல் திறனை 2020 ஆம் ஆண்டளவில் 12 மில்லியனாக உயர்த்தும் வகையில் விமான நிலைய விஸ்தரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது ஜப்பான் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த செயற்றிட்டத்தின் ஆரம்பக்கட்ட திட்டப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இத் திட்டத்தின்படி புதிய பிரயாணிகள்தளம் மற்றும் 8 விமானக் கொள்ளளவுடைய இறங்குதளம் என்பனவும் அமைக்கப்படவுள்ளது.

## பங்குச் சந்தை விபரம்


(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3706.72 | 08.92 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4269.18 | 29.61 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1 511.10 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : என்வெயர்மென்டல் றிசோசஸ் இன்வெஸ்மன்ட்,த புக்கிட் ,நெஸ்ரல் லங்கா ,த போரஸ் றிசோட் ,லங்கா வொலரைல்.

***சரிவைக் கண்ட பங்குகள்***: சிறிலங்கா ரெலிகொம்,டிப்பிட் புறடெக்ஸ் , ஹைகாப் பி.எல்.சி.,ரான்ஸ் ஏசியா ஹோட்டல் ,டி.எப்.சி.சி.

# உலகின் முன்னணி 500 வங்கிகளில் இந்தியாவைச் சேர்ந்த 20 வங்கிகள்




உலக அளவில் முன்னணியில் உள்ள 500 வங்கிகளின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 20 வங்கிகள் இடம்பெற்றுள்ளன.

இப்பட்டியலை இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த பிராடு பைனான்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

**பாரத ஸ்ரேட் வங்கி**

இதனடிப்படையில் நடப்பு 2010 ஆம் ஆண்டில் 455.10 கோடி டொலர் (ரூ.20 ஆயிரத்து 934.60 கோடி) பிராடு மதிப்பைப் பெற்று பொதுத் துறையைச் சேர்ந்த பாரத ஸ்ரேட் வங்கி 36-வது இடத்தைப் பிடித்துள்ளது.

சென்ற 2009ஆம் ஆண்டு இவ் வங்கி 70ஆவது இடத்தில் இருந்தது. இவ் வங்கியின் பிராடு மதிப்பு தற்போது 3 மடங்கு உயர்ந்துள்ளது.

முன்னணி வங்கிகள் பட்டியலில் இந்திய வங்கிகளில் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி ,எச்.டி.எவ்.சி வங்கி ,பஞ்சாப் நஷனல் வங்கி , பாங் ஒப் இந்தியா , பாங் ஒப் பரோடா ,கனரா வங்கி , இந்தியன் ஓவசீஸ் பாங் ,அலகாபாத் வங்கி உள்ளிட்ட 20 வங்கிகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த 2007ஆம் ஆண்டில் இந்த பட்டியலில் 6 இந்திய வங்கிகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. இவற்றின் எண்ணிக்கை தற்போது 3 மடங்குக்கும் மேல் அதிகரித்துள்ளது.

**செயற்றிறன்**

இது குறித்து பிராடு பைனான்ஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் உன்னிக்கிருஷ்ணன் கூறும்போது ,

இந்தியன் வங்கிகள் அவற்றின் செயற்றிறன் மற்றும் பிராடு மதிப்பை வெளியுலகுக்கு தெரிவிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாரத ஸ்ரேட் வங்கி இதற்கு ஒரு நல்ல உதாரணமாகவுள்ளதெனத் தெரிவித்துள்ளார்.

கு.முருகதாஸ்

# தனியார்துறை ஊழியர்களின் விடுமுறையை அடுல்படுத்த நடவடிக்கையினை எடுத்தல்

கடை, காரியாலய சட்ட நடைமுறைகளுக்கு அமைய தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வாராந்த விடுமுறையாக ஒன்றரை நாட்கள் விடுமுறை வழங்க வேண்டும். மேலும் பூரணை தினங்களிலும் பகிரங்க விடுமுறை தினங்களிலும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும். மேற்கூறிய விடுமுறையினை ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து தொழில் வழங்குநர்களையும் வேண்டுவதுடன் அது தொடர்பான பதிவேடுகளினைப் பேணுவதுடன் தொழில் பரிசோதனைக்கு வருகின்ற தொழில் உத்தியோகத்தரிடம் பரிசீலனைக்கு சமர்ப்பிக்குமாறும் யாழ். உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பு வருமாறு;

ஊழியர்களின் விருப்பத்துடன் மேற்கூறிய விடுமுறை தினங்களில் ஊழியர்களினை வேலைக்கு அமர்த்தும்போது அதற்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குதல் வேண்டும்.

பூரணை தினங்களில் ஊழியர்களின் விருப்பத்துடன் வேலைக்கு அமர்த்தும்போது சாதாரண சம்பளத்தின் ஒன்றரை மடங்கு சம்பளம் வழங்க வேண்டும். பகிரங்க விடுமுறை தினங்களில் வேலைக்கு அமர்த்தும்போது சாதாரண சம்பளத்தின் இரட்டிப்பு மடங்கு சம்பளத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது அவ்வருடத்தில் பிறிதொரு தினத்தினை விடுமுறையாக வழங்க வேண்டும்.

மேற்கூறிய விடுமுறை நிபந்தனைகளினை அனுசரித்து நடக்குமாறு அனைத்து தொழில் தருநர்களையும் வேண்டுகின்றேன். மேற்கூறிய விடுமுறை அனுசரித்தல் சம்பந்தமாக யாழ்ப்பாண வணிகர் கழகத்துடன் கலந்துரையாடியபோது அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க உடன்பட்டனர். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறுவதுடன் அதற்கு அனைத்து நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றேன் என்றுள்ளது. (சு)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய பொது மண்டபத்தில். வே. செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள், புதிய வாசகர் வட்டத்திற்குரிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளதாக சனசமூக நிலைய செயலாளர் தெரிவித்துள்ளார். (6-4)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தினால் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாப் பாட நெறி மட்டம் Iக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் க. பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமை அல்லது. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். இதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 20ஆம் திகதி ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகரும் நூலக சங்க இணைப்பாளருமான திருமதி லதா உமாசங்கருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6-3)

## மாசிமக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளதுடன் மாசிமகப் பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (6-4)

# கலை இலக்கிய சங்கத்தின் தை பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் தைபண்பாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தில் வெ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சைவப்புலவர் பொன். சுகந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புரைகளை பண்டிதை திருமதி வ. பத்தினிப்பிள்ளை, சைவப்புலவர் நவரத்தினம், அதிபர் ஆ. சிவநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றமும் நெல்லியடி அம்பலத்தாடிகள் கலாமன்றம் வழங்கும் நாடகமும், நடன நிகழ்வுகளும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-35)




# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

(பொன்னலை)

வலி மேற்குப் பிரதேச வயல்வெளிகளில் கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், பொன்னாலை மற்றும் சங்கானை போன்ற இடங்களிலுள்ள வயல்களிலேயே இவ்வாறு கட்டக்காலிக் கால்நடைகள் அட்டகாசம் செய்து வருகின்றன.

வயல்களில் அத்து மீறிச் செல்லும் கால்நடைகள் அப்பகுதி வயல்களில் பயிரிடப்பட்டிருக்கும் மரக்கறி மற்றும் சிறுதானியங்களை அழித்து நாசம் செய்து வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த விவசாய அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கின்றனர்.

வலி மேற்குப் பிரதேசத்தில் இம்முறை விவசாயிகள் மிகவும் ஆர்வத்துடன் சிறுதானியம் மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. (2-49)

# சிறுவர்களை கடத்தும் முயற்சி; பரவிய வதந்தியால் பெற்றோர் அச்சம்

## காரைநகரில் சம்பவம்

காரைநகரில் சிறுவர்களை கடத்தும் முயற்சிகள் நடைபெற்றதாக பரவிய செய்தியை அடுத்து பெற்றோர்கள் மத்தியில் பெரும் பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; காரைநகர் மேற்கு வீதியில் வேம்படிப் பகுதியில் பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுவர்களைக் கடத்தும் முயற்சி நடைபெற்றதாகவும் சிறுவர்கள் கூக்குரலிட்டதனால் அம்முயற்சிகள் தோல்விடைந்ததாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை சம்பவம் தொடர்பாக எவரும் கிராமசேவையாளரிடமோ அல்லது வேறு எவரிடமோ முறையிடவில்லை எனத் தெரி விக்கப்படுகிறது. ஆனாலும் மேற்படி சம்பவத்தின் உண் மைத் தன்மையை அறியாத நிலையிலும் அச்சமடைந்த பெற்றோர்கள் பாடசாலைக்கு சிறுவர்களை தாமே கூட்டி வந்து மீளவும் அழைத்துச் செல்கின்றதாகவும் தெரியவந்துள்ளது. (246-2)

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான வரவேற்பு நிகழ்வு – 2010

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் 2010 கல்வியாண்டிற்கான புதிய முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பீடாதிபதி எஸ். யோகநாதன் தலைமையில் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அருளுரையினை யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வர ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ. முபாரக் ஆகியோரும் வாழ்த்துரையினை டாக்டர் லயன் வை. தியாகராஜா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரட்ணம், ஆசியுரையினை ஸ்கந்தவரோதாயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (2-6)

## பாய்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் தளபாட வசதியின்றி நிலத்தில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களை நேரில் சென்று பார்வையிட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடக்கு-கிழக்கு இணைப்பாளரினால் அம்மாணவர்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினூடாக ஒரு தொகுதி பாய்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (4-139)

# யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலையில் சேராத, பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்கள் மற்றும் ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்கள் தொடர்பான விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களது சகல பங்களிப்பினையும் பெற்று மாணவர்களை வளப்படுத்தும் பாரிய முயற்சியில் ஈடுபடவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான இக்குழுவினரால் மேற்கொள்ளப்படவுள்ள இம்முயற்சியில் முதற்கட்டமாக பிரதேச செயலகங்களுக்குச் சென்று பிரதேச செயலர்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளனர்.

இதனடிப்படையில் பிரதேச செயலக ரீதியாக கிராம சேவகர்கள் மற்றும் கட்டாயக் கல்விக்குப் பொறுப்பான அலுவலர்கள் ஆகியோருக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றினை பின்வரும் கால அட்டவணைக்கு ஏற்ப பிரதேச செயலகங்களுடன் இணைந்து செயற்பட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி புதன் கிழமையும், நல்லூர் பிரதேச செயலகத்தில் 11ஆம் திகதி வியாழக்கிழமையும், கோப்பாய் பிரதேச செயலகத்தில் 12ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் பயிற்சிப் பட்டறை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து அதிபர்களுக்கும் வரவுக் குழுவிற்கும் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுக்கும் கோட்ட ரீதியாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படவுள்ளன. அத்துடன் பாடசாலை மட்டத்தில் சகல ஆசிரியர்களுக்கும் பாடசாலை நலன் விரும்பிகளுக்கும் மேற்படி விடயம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தியும் பிரதேச ரீதியாக கிராமங்கள் தோறும் பெற்றோர்களுக்கும் சமூக அமைப்பினருக்கும் விழிப்புணர்வு கருத்தரங்குகளும் நடத்தியும் சகலரதும் பங்களிப்புடன் பாடசாலை வரவுக் குழவின் செயற்பாடுகள் வலுவூட்டப்பட்டு திட்டமிட்ட வகையில் கண்காணிக்கப்படவும் உள்ளது.

யாழ். கல்வி வல்யத்தினுள் சகல பிள்ளைகளும் கட்டாய கல்வி வயதெல்லை வரை கல்வி அறிவை பெற்று சமகால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆற்றலை வளர்த்து தனக்குப் பொருத்தமான தொழிற் பயிற்சிகளையும் பெற்று சமூகத்தில் மதிப்புள்ள பிரஜையாக வாழ வழிகாட்ட வேண்டும் என்ற உறுதியுடன் இப்பணி முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-30)

உலகில் எந்த ஒரு விஷயமும் காரண மின்றித் தோன்றுவதில்லை.
-ஸ்டோவ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தெற்கில் பானை பக்குவம் வடக்கில் காணி பக்குவம்

சிங்களக் கதைகளில் மாதனமுத்தாவின் கதை பிரபலமானது. அந்தக் கதைக்குள் இருக்கக் கூடிய மூடத்தனமும், நகைச் சுவையும் சிங்கள மக்கள் என்ற எல்லைத் தாண்டி தமிழ் மக்களையும் வந்தடைந்தது.

இதில் பானை பக்குவம் என்ற கதை தமிழ் மொழிப் பாடப்புத்தகத்தில் இடம் பெற்றதும் உண்டு.

இத்தகைய கதைகள் நகைச்சுவைக்கானவை மட்டுமல்ல, அறிவின்மையைக் கூறி அறிவைக் காட்டும் உடன்பாட்டு எதிர்மறை தன்மையைக் கொண்டவையும் ஆகும்.

எதுவாயினும் தென்பகுதியில் ‘பானை பக்குவம்’ என்ற கதை அறியாமையை வெளிப்படுத்துவதாக இருந்தாலும், வடக்கில் ‘காணி பக்குவம்’ என்று இங்கு சொல்லப்படும் கதை மக்களை விழிப்பூட்டும் கதையாகும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தவண்ணம் உள்ளனர்.

காரணகாரியமின்றி யாழ்ப்பாணம் நோக்கி வரும் தென்பகுதி மக்களோடு அங்குள்ள நிறுவனங்களும், வங்கிகளும், கம்பனிகளும் தாராளமாக வந்து சேர்ந்துள்ளன.

இவை அனைத்தினதும் வருகையில் யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரம் தொடர்புபட்டுள்ளது என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.

எனினும் இது தொடர்பான விளக்கம், விழிப்புணர்வு பற்றி யாழ்ப்பாணத்தின் புத்திஜீவிகள் புரிந்து கொண்டிருந்தாலும் ‘மௌனம் கலக நாஸ்தி’ என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பதை உத்தம விரதமாக அவர்கள் கொண்டுள்ளனர்.

இதன் விளைவு எதிர்காலத்தில் பெரும் கலகத்திற்கு அத்திபாரமாக அமையும் என்பதால், யாழ்ப்பாணப் புத்திஜீவிகள் தங்கள் மௌன விரதம் கலைத்து உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்க வேண்டும்.

குறிப்பாக தென்பகுதி அமைப்புகள் யாழ்ப்பாணத்தில் நிலம் வேண்டும் பணியில் தீவிரமாக இருக்கும் போது நம்மவர்களும் ஐந்து பத்து அதிகம் என்பதற்காக காணிகளை கையளித்தால் நிலைமை என்னவாகும்?

ஆக, யாழ்ப்பாணத்தின் தேசவழமைபற்றி நம் மக்கள் அறிய வேண்டும்.

அங்கு பானை பக்குவம் என்ற கதை வெறுங் கதை. ஆனால் இங்கு காணி பக்குவம் என்ற கதை கட்டாயம் சிந்திக்க வேண்டிய கதை.

எங்கே பார்க்கலாம் எங்கள் அறிஞர்கள்-எம்.பிக்கள் திருவாய்மலர்ந்தருள்வார்களா?

# யுத்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது ஆனால் தேசியப் பிரச்சினைக்கு இன்னும்தீர்வு இல்லை

## அரசியல் சாசன அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தேசியப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை எனவும் அரசியல் சாசன அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அரசியல் சாசன மாற்றமொன்றை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனவும் தற்போதைய அரசியல் சாசனம் பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிகோலியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கமைய வடக்கு-கிழக்கு மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களிக்கவில்லை என குற்றம் சுமத்துவதன் ஊடாக இனவாதத்தை விதைக்க முயற்சிப்பதாகவும் எனினும் அதிகளவான தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்பது வெளிப்படையான உண்மை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல் சாசன அடிப்படையில் இனவாதப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

## மணல் பெறுவதற்கு அனுமதி கோருவோர்

## பிரதேச செயலர்களுக்கென ஒதுக்கப்பட்ட தினங்களில் சமுகமளிக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மணல் பெறுவதற்கு அனுமதி கோரி 4ஆம் குறுக்குத் தெருவில் உள்ள மகேஸ்வரி நிதியத்தின் யாழ். அலுவலகத்திற்கு தினமும் பெருமளவானோர் கூடுவதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் தத்தம் பிரதேச செயலக பிரிவுகளுக்கென ஒதுக்கப்பட்ட தினங்களில் வருகைதரும்படி மகேஸ்வரி நிதிய செயல்திட்ட இணைப்பாளர் த.ரஜீவ் கேட்டுக்கொள்கின்றார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம், சங்கானை, காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலக பிரிவிலுள்ளவர்கள் திங்கட்கிழமையும் நல்லூர், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவிலுள்ளவர்கள் செவ்வாய்க்கிழமையும் கோப்பாய், வேலணை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் புதன்கிழமையும் சண்டிலிப்பாய், சாவகச்சேரிப் பிரிவிலுள்ளவர்கள் வியாழக்கிழமையும் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்டோர் வெள்ளிக்கிழமைகளில் வருகை தருமாறும் கேட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட குடத்தனை கிழக்கில் உள்ள மணல் ஏற்றும் இடத்தில் ஒரு நாளைக்கு 500 டிரக்டர் லோட் மண் வெளியே எடுத்துச் செல்வதற்கேற்ற வகையில் ஒரு நாளைக்கு 100 பேருக்கு மட்டுமே மணல் பெறுவதற்கான ரோக்கன் கொடுத்து வருவதாகவும், அத்துடன் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுக்கே மணல் வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-30)

## சுகாதார ஊழியர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு உரிமை

(கொழும்பு)

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் சுகாதார ஊழியர்கள் அனைவரும் இனிமேல் தபால் மூலம் வாக்களிக்கலாம். இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. இதற்கான பிரேரணையை சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வைத்திருந்தார்.

நாட்டில் உள்ள சகல அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சகல தரத்து ஊழியர்களுக்கும் இச் சலுகை வழங்கப்படும் என்றும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றில் இவர்கள் தபால் மூலம் வாக்களிக்கும் உரிமை பெறுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## அரசியல் ஆய்வுகளுக்காக இலங்கைக்குள் பிரவேசிப்போருக்கு தடை விதிக்கப்படும்

### திவயின செய்தி


(கொழும்பு)

வெளிநாட்டு பிரஜைகள் அரசியல் ஆய்வுகளுக்காக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்படும் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் விசாரணை மற்றும் ஆய்வு என்ற பெயரில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நபர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதாக பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

கொழும்பின் நட்சத்திர விடுதிகளில் தங்கியிருந்து அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சில வெளிநாட்டு சக்திகள் முனைப்பு காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு இவ்வாறான நபர்கள் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் தகவல்களை திரட்டியுள்ளதாக தெரிகிறது. (2-6)

# ஆழத்திற்குள் செல்வோம்



இயலுமிடத்திலெல்லாம் செயல் செய்து முடித்தல் நல்லது; எவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்யவேண்டும்.

ஆம், முத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் ஆழ் கடலுக்குள் செல்ல வேண்டும். அறிஞனாக வேண்டுமென்றால் ஆழ்ந்து படிக்கவேண்டும். ஞானத்தை அடைய வேண்டுமென்றால் ஆழ்ந்த தியானத்திற்குள் செல்லவேண்டும்.

வெறும் மேலோட்டமாகப் படிப்பது அறிவைத் தராது; வெறுமனே கண்களை மூடியிருப்பது ஞானத்தைத் தராது எனவே எதைச் செய்தாலும் ஆழமாகச் சென்று செய்ய வேண்டும்.

*செய்வன திருந்தச் செய்* என்னும் பழமொழி இங்கு நினைவு கூறத்தக்கது.

## பரமபிதா காட்டிய பாதை

இன்றைய நற்செய்தி இதைத்தான் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. இன்றைய நற்செய்தியினை நாம் ஆழ்ந்து படித்தால் பல உண்மைகள் நமக்குப் புரியும். முதலில் இயேசு கெனசரேத்து ஏரிக்கரையில் நின்று கொண்டிருக்கிறார். அப்போது திரளான மக்கள் தன் வாயிலிருந்து வரும் இறை வார்த்தையைக் கேட்பதற்குத் தம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காண்கின்றார்.

ஆனால் இந்த இறைவார்த்தை நம் உள்ளத்திற்குள் சென்று நம்மைப் பாதித்து பின் பலன் கொடுக்க வேண்டும் என்றால் ஆழமான தியானத்தில் இறைவார்த்தையைக் கேட்டு தியானித்து பின் வெளிவரவேண்டும். முற்காலத்தில் முனிவர்களும் மகான்களும் ஆழ்ந்த தியானத்தில் தான் இறையைக் கண்டார்கள். ஞானத்தைப் பெற்று ஞானிகளானார்கள்.


அதாவது எந்த ஒரு செயலைச் செய்தாலும் திறந்த மனதோடு செய்யவேண்டும். திறந்த மனம் இல்லையென்றால் பல நல்லவைகளை வெளிநாட்டவைகளை இழக்க நேரிடும். எனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று தெரியாதவைகளை விட்டுவிடுவோம் கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பது எவ்வளவு உண்மை


ஆம், சிறியவராயினும் அவரிடம் உள்ள நல்லவற்றைக் கேட்டு ஏற்றுச் செயல்பட்டால் பல வல்ல செயல்களைக் காண முடியும். நாம் எப்படி? மனதை திறப்போமா? இறை வார்த்தையை ஆழ்ந்து கேட்போமா? கேட்டதை ஆழ்ந்து தியானித்து செயல்படுவோமா? அதிசயத்தைக் காண்போமா? எதைச் செய்தாலும் ஆழ்நிலையில் செய்வோம்.

ஜோன் ரொபேட்







யாழ். கனகரத்தின மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பாடசாலையின் 80ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட அமுதஜோதி நூலை நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா வெளியிட்டு வைத்து உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : றம்சன்)

### ஆய்வுகூட வசதிகளற்ற

## வைத்தியசாலைகளுக்கான புதிய நடைமுறை

(கொழும்பு)

ஆய்வுகூட வசதியற்ற வைத்தியசாலைகளில் பரிசோதனை நடவடிக்கைகளை சுகாதார அமைச்சின் செலவில் தனியார் துறையினரால் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதான வைத்தியசாலைகளில் ஆய்வுகூடங்களில் நிலவுகின்ற நெருக்கடிகளைக் குறைப்பது இதன் முக்கிய நோக்கமாகுமென குறிப்பிடப்படுகின்றது.

கிராமிய வைத்தியசாலைகளில் போதிய ஆய்வுகூட வசதிகள் இன்மையால் அந்த நடவடிக்கைகளுக்காக நோயாளர்களைப் பிரதான வைத்தியசாலைகளுக்கு மாற்ற நேரிடுவதுடன் அதன் காரணமாக பாரிய செலவையும் எதிர்நோக்க நேரிடுவதாக அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

புதிய நடைமுறையின் கீழ் நோயாளர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தவிர்க்கப்படுவதுடன் உத்தேசத் திட்டமாக ஏற்கனவே கிராமிய வைத்தியசாலை சிலவற்றில் இந்த நடைமுறை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது எனவும் இதற்கமைய ஆய்வுகூட வசதிகளற்ற சகல வைத்தியசாலைகளுக்கும் எதிர்காலத்தில் இந்தப் புதிய நடைமுறையை சிபார்சு செய்வதற்கு அமைச்சு எண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## வவுனியா முகாம்களில் 18 நடமாடும் நூலகங்கள்

### ஜப்பான் திட்டம்

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கென 18 நடமாடும் நூலகங்களை வழங்கிச் செயற்படுத்த ஜப்பான் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாம்களிலுள்ள சிறுவர்களின் கல்வி வளர்ச்சியினை நோக்காகக் கொண்டே இச்செயற்றிட்டத்தினை முன்னெடுத்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது.

முதற்கட்ட புத்தகங்களை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அன்றைய தினம் மெனிக்பாம் முகாம் சிறுவர்களுக்கான நூல்களை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

### இலங்கைக்கான

## ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தை இடைநிறுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தீர்மானம்

இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைத் திட்டத்தை இரத்து செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சலுகைத் திட்டம் இடை நிறுத்தப்பட்டமை தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு இந்த மாத இறுதியில் விடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முனைப்புக்களை இலங்கை எடுக்கவில்லை என ஐரோப்பிய ஆணைக்குழுவின் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதனைப் பெற்றுக் கொள்வதற்கு 16 வகையிலான நிபந்தனைகளை குறித்த நாடுகள் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் சலுகைத் திட்ட இடை நிறுத்தம் உடனடியாக அமுலுக்கு வராது எனவும் ஆறு மாத காலம் வரையில் சலுகைகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 16ஆம் திகதி பிரசல்ஸில் நடைபெறவுள்ள ஐரோப்பிய் நிதி அமைச்சர்களுக்கு இடையிலான மாநாட்டின் போதே சலுகைத் திட்ட இடை நிறுத்தம் தொடர்பில் அறிவிக்கப்படவுள்ளது.

தற்போது நிலைமைகளை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது பின்பற்றிய நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும் உத்தியோகபூர்வமாக சலுகைத் திட்டம் இடை நிறுத்தப்படாது என ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் ஐரோப்பிய ஒன்றிய விசாரணைகளின் பின்னர் இலங்கையில் மனித உரிமை நிலைமைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் சலுகைத் திட்டம் இடை நிறுத்தப்படுவதற்கு உறுப்பு நாடுகளினது அங்கீகாரமும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பரிந்துரையும் அவசியமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய சாதகமான முடிவு கிடைக்கப் பெறும் என நம்புவதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி ரிவன்த ஆரியசிங்க தெரிவித்துள்ளார். (2-6)

### தொழில் வாய்ப்பு தேடும் இளைஞர்களுக்கான

## புதிய தொழில் பயிற்சித் திட்டம்

### கல்வி அமைச்சு அறிமுகப்படுத்துகிறது

பாடசாலைகளைவிட்டு இடைவிலகிய மற்றும் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து வெளியேறிய இளைஞர்களின் நன்மை கருதி தொழிற்பயிற்சியளிக்கும் திட்டமொன்றை கல்வி அமைச்சு புதிதாக அறிமுகம் செய்துள்ளது.

துரிதப்படுத்தப்பட்ட திறன் பெறுகை நிகழ்ச்சித் திட்டம் எனப்படும் இந்த நடவடிக்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கல்வி வலய ரீதியாக தெரிவு செய்யப்படும் இளைஞர்களுக்காக தொழில் வழிகாட்டல், தொழில் தேடுதல் என்பவற்றுக்கான ஆலோசனைகள், கணனி மற்றும் கைத்தொழில் துறையை விருத்தி செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட ரீதியாக 15 நாட்கள் கொண்டதாக இந்தத் திறன் பெறுகை நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்வாய்ப்பைத் தேடி அலையும் இளைஞர்களுக்கு இப்பயிற்சி நெறியின் மூலமாக வெற்றியளிக்கக்கூடியதும் சிறந்த தொழில் வாய்ப்பைப் பெறக்கூடியதுமான வழிகாட்டல்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

### தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

கிளிநொச்சி வலய ஆசிரியர்கள், அலுவலர்களில் 01-01-2010இற்குப் பின்னர் கிளிநொச்சி வலயத்தில் அறிக்கையிட்டு பின்னர் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய வலயங்களில் தற்காலிக இணைப்பு பெற்றுக் கடமையாற்றும் ஆசிரியர், அலுவலர்களுக்கான தை மாத சம்பளம் நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளது. எனவே ஆசிரியர்கள் தங்களின் லீவு விபரத்தினை ஒப்படைத்து தமது சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி வயலக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## புதிய பாடத்திட்டங்கள் தொடர்பான ஆய்வு நடவடிக்கை

தரம் - 6 முதல் தரம் - 11 வரையுள்ள பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டங்கள் தொடர்பில் முழுமையான ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித்துள்ளது.

புதிய பாடத்திட்டங்கள் எந்தளவிற்கு வெற்றிகரமானவை என்பது தொடர்பில் ஆராய்வது இதன் முக்கிய் நோக்கமாகுமென கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நிமல் சியம்பலாகொட குறிப்பிட்டார்.

இதற்கமைய தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகத்தர் குழுவினரை ஈடுபடுத்தி பாடசாலை மட்டத்தில் இந்த ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களின் திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் புதிய கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கடந்த 2002 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## ஆன்மீக நிகழ்வு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு ஆலய பூசையைத் தொடர்ந்து மகாபாரதம் என்னும் விடயம் பற்றி பொன். சுகந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

### இந்தோனேசிய அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என இந்தோனேசிய அரசு தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் சட்டவிரோதமான முறையில் இந்தோனேசியாவுக்குள் செல்ல முயன்றவேளையில் கைது செய்யப்பட்டு கடந்த 4 மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 240 பேருக்கு மேற்பட்டவர்களுக்கும் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தோனேசியா படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இவ் அகதிகள் தாம் பயணித்த கப்பலிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர். 3ஆவது நாடொன்றில் குடியேறுவதற்கு அனுமதி வழங்கும் வரை கப்பலிலிருந்து வெளியேறப்போவதில்லை எனக் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில் இவ் அகதிகளின் பிரச்சினைக்கு ஓர் உரிய தீர்வுகாண முயன்று வருகின்றோம். தடுத்து வைக்கப்பட்டுள்ள 240இற்கும் மேற்பட்ட அகதிகளுக்கு இந்த மாத இறுதியில் தீர்வு காணப்படுமென இந்தோனேசியத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளது. (6-9)

# ஹலிஸ், அம்லா சதமடித்து கை கொடுத்தனர்; தென்னாபிரிக்க அணி சரிவிலிருந்து மீண்டது

(நாக்பூர்)

ஜக் கலிஸ்–ஹசிம் அம்லா ஜோடியின் பிரிக்கப்படாத இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேரமுடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.


இதில் முதலாவது டெஸ்ட் நேற்று நாக் பூரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாண யச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான பிறின்ஸ் பூச்சியத்துடனும் அணித்தலைவர் சிமித் 06 ஓட்டங்களுடனும் சகிர்கானின் பந்துவீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 06 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

இந்நிலையில் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த அம்லா–கலிஸ் ஜோடி நிதான மாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தனர்.

இதில் ஜக்கலிஸ் 75 பந்துகளில் அரைச் சதத்தைக்கடக்க நேற்றைய முதல்நாள் ஆட்ட மதியபோசன இடைவேளையின் போது தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக் களை இழந்து 90 ஓட்டங்களை எடுத்தது.







இந் நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா–ஹலிஸ் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர். இதில் ஜக் ஹலிஸ் 165 பந்து களில் தனது 34 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து இந்திய முன்னாள் வீரர் காவாஸ்கரின் (34 சதங்கள்) சாதனையை சமன் செய்தார். மீறு முனையில் அம்லா 132 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்திசெய்ய தென்னா பிரிக்க அணி 62.3 ஓவர்களில் 200 ஓட்டங் களை எட்டியது.

இந்த ஜோடியை பிரிக்க இந்திய அணித் தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூபங் களையும் வகுத்தும் பலனளிக்காமல் போக தென்னாபிரிக்க அணி 77.3 ஓவர்களில் 250 ஓட்டங்களை எட்டியது.

இதில் ஹசிம் அம்லா 204 பந்துகளில் தனது 8ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய மறுமுனையில் ஜக் ஹலிஸ் 267 பந்து களில் 150 ஓட்டங்களை கடந்தார்.

இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேரமுடிபில் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட் டுக்களை இழந்து 291 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக் ஹலிஸ் 290 பந்துகளில் (13 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 159 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 225 பந்து களில் (11 பவுண்டரி அடங்கலாக) 115 ஓட்டங் களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகிர்கான் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களின் அணிவகுப்பு இடம் பெறுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட விருந் தினர் களையும், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் உரையாற்றுவதையும் வெற்றி பெற்ற அணிகளுக்கான கேடயங்களை ஆளுநர் வழங்குவதையும் படங்களில்காணலாம்.

# பொன்சேகாவின் படையணியை...

எவ்வாறு தப்புவது

தமது பதவியை எவ்வாறு தக்கவைக்க லாம் என அதில் ஆராயப்பட்டது. இறுதியாக தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் கடந்த மாதம் 24ஆம் திகதி பாதுகாப்புச்சபை கூட் டம் கூட்டப்பட்டது.

தேர்தலில் தோல்வியடைந்தாலும் எவ் வாறு மகிந்த தனது பதவியை தக்கவைப்பது என்ற திட்டங்கள் அங்கு தீட்டப்பட்டன.

வட பகுதியில் நிலைகொண்டிருந்த ஐந்து பற்றலியன் சிறப்பு படையணிகள் கொழும் புக்கு கொண்டுவரப்பட்டன.

இந்த ஐந்து பற்றலியன்களையும் தலை மை தாங்குவதற்கு லெப்.கேணல் ஹரேந் திரா வனசிங்கா நியமிக்கப்பட்டார். அவர் முன்னாள் இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்காவின் மகனாவார்.

ஆனால் நித்தம்புவ பகுதியில் நடை பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் வனசிங்க தனது ஆதரவுகளை பொன்சேகாவுக்கு தெரிவித்தி ருந்தார். அதுவும் பின்னர் அரசின் திட்டத்தை வெளியில் கொண்டுவந்திருந்தது.

இராணுவத்தின் அதிக போரிடும் வலு வுள்ள படையணியாக சிறப்புப்படையணிகள் திகழ்வதால் அவை கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன. இந்த படையணிகளுடன் பாது காப்பு செயலாளரின் படையணியான கஜபா றெஜிமெண்ட் மற்றும் கவசப்படையணி ஆகிய னவும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டன.

கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட சிறப்புப் படையணிகள் பொது மக்களுக்கு சந்தே கம் ஏற்படாதவாறு சீதுவை, குருவித்த, எம் பிலிப் பிட்டியா, பாணந்துறை, கொழும்பு குதிரைச்ச வாரி திடல் ஆகியவற்றில் தங்கவைக்க பட்டி ருந்தன.

இந்த முழு நடவடிக்கைகளுக்கும் கட் டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்னா நியமிக்கப்பட்டார்.

கடற்படையும் வான்படையும் உசார் நிலைக்கு கொண்டுவரப்பட்டன. இந்த முழு நடவடிக்கையையும் இராணுவ தளபதியி னால் திட்டமிடப்பட்டது.

மகிந்த தேர்தலில் வெற்றிபெறாதுவிட் டால் பொன்சேகா ஆட்சியமைக்கும் போது அவருக்கு உதவியாக சிங்க றெஜிமெண்ட் மற்றும் கொமாண்டோ படையணிகள் செயற் படலாம் என அரசு கருதியது.

தென்னிலங்கை மக்களுடன் இணையும் இந்த படையணிகள் மீது தாக்குதலை மேற் கொண்டு ஆட்சியை கைப்பற்றுவதே சிறப்புப் படையணி மற்றும் கஜபா படையணிகளின் திட்டம். அதாவது சிங்கப்படையணியை முற் றாக அழித்து ஆட்சியை கைப்பற்றுவதே அர சின் திட்டம். அவ்வாறு நடைபெற்றிருந்தால் கொழும்பில் கடந்த 27ஆம் திகதி ஒரு இரத்த களரி ஏற்பட்டிருக்கலாம்.

எனினும் அரசின் இந்த திட்டங்களை இரா ணுவத்தின் மூத்த அதிகாரிகள் சிலரும், ஓய்வு பெற்ற அதிகாரிகளும் எதிர்த்திருந்தனர். இந்த நடவடிக்கையில் பங்கு கொள்ள வேண்டாம்என அவர்கள் லெப் கேணல் ஹரேந்திரா வன சிங்க வையும் எச்சரித்திருந்தனர்.

ஆனால் தன்னால் இராணுவத்தளபதி யினதும், பாதுகாப்பு செயலாளரினதும் உத்தரவுகளை மீறமுடியாது என வனசிங்க தெரிவித்திருந்தார்.

இவ்வாறு இந்த நடவடிக்கையை எதிர்த்த அதிகாரிகளையே தற்போது அரசு கைது செய் துள்ளதுடன் இராணுவத்திலிருந்தும் நீக்கியுள் ளது.

இதனிடையே இராணுவத்தில் உள்ள சிங்க றெஜிமெண்ட் படையணியை விரைவில் கலைத் துவிடுவதற்கு அரசு திட்டமிட்டுவருவதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# இலங்கையின் ஆயுதக் கொள்...

300 மில்லியன் டொலர்கள் பெறுமதி யான இந்த ஆயுதக் கொள்வனவைக் கடன் அடிப்படையில் வழங்குவதற்கு ரஷ்யா முன் வந்துள்ளது.

இதற்கான உடன்பாடுகள் ஜனாதிபதியின் ரஷ்ய விஜயத்தின் போது மேற்கொள்ளப் படும் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவித் துள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ரஷ் யாவுக்குப் புறப்பட்டுள்ள நிலையில் ஒப்பந் தங்களில் கையொப்பம் இடுவதற்கு வசதி செய் யப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் பிரதி நிதி அமைச் சர் டிமிற்றி பன்கின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் டிமிற்றி மெட்வெடேவ் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷை நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் ரஷ்யப் பல் கலைக்கழகத்தில் நடைபெறும் பொன் விழா வில் ஜனாதிபதி கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை இராணுவத்தைப் பலப்படுத் தும் நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொள் ளும் எனவும் அதற்காக 300 மில்லியன் டொலர் ஆயுதங்களைக் கடனாக வழங்க வுள்ளதாகவும் றியா நொவோஸ்ரி தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை ரஷ்யாவிடமிருந்து துருப்புக் காவி உலங்கு வானூர்திகள், கண்ணி வெடி அகற்றும் கருவிகள், படையினருக்கான கவச வாகனங்கள் உட்பட பெருமளவான கனரக நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வுள்ளதாகவும் படைத்தரப்புத் தகவல்கள் தெரி வித்துள்ளன. (ச–5)

# விற்பனைக்கு

- Japan இல் தயாரிக்கப்பட்ட Sony TVகள் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
- Mobil Phoneகளின் பற்றறிகள், Chargerகள், மற்றைய உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- பற்றறியில் இயங்குகின்ற மோட்டார் சைக்கிள்களிற்கான உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.

**NEW ASIAN CENTER**

56/15, ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கியருகாமை), யாழ்ப்பாணம்.

T.P.:0718561654, 0779254078

(C-4402)


## உழவு இயந்திரம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கான 2 இலட்சம் ரூபாய் கடன் திட்டத்தின் கீழ் 2 விவசாயிகளுக்கு 2 சில்லு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இணுவிலில் நேற்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்கார் இண்டஸ்ரீஸ் பிறைவேட் லிமிட்டெ நிறுவனத்திலிருந்து 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2 சில்லு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. (ச-5)

# இலங்கையில் அவசர காலச் சட்டம் தேவையில்லை - பவ்ரல் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அவசர காலச் சட்டம் மீண்டும் நீடிக்கப்பட்டமை தொடர்பில் பவ்ரல் அமைப்பு தனது கவலையை வெளியிட்டிருக்கின்றது. இது தொடர்பில் அமைப்பின் றோகண ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது,

நாட்டில் அவசரகால நிலைமை, போர் நிலைமையொன்றின் போது அவசரகாலச் சட்டம் இருக்க வேண்டியது அவசியம்.

கடந்த காலங்களில் யுத்தம் வடக்கு கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது. அதற்கு இவ்வாறான அவசரகாலச் சட்டம் அவசியம். அதைநாம் ஏற்கின்றோம். ஆனால் இன்று இந்த நாட்டில் போர் இல்லை.

இந்த நிலையில் அவசரகாலச் சட்டம் தேவைதானா என அவர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. பொதுத் தேர்தல் நடைபெறப் போகின்றது. இந்த நிலையில் அவசரகாலச் சட்டம் தேவையில்லை என்றுதான் கருதுகின்றேன்.

இச்சட்டத்தினால் தேர்தல் நடைமுறைகளுக்கு எந்தவிதமான நேரடியான பாதிப்பும் இல்லை. இந்த சட்டம் தேர்தல் நடைமுறை தொடர்பானது இல்லை என்றாலும் இந்தச் சட்டம் அரசியல் நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்யும் வாய்ப்பு உள்ளது.

இலங்கையில் அரசியல் சூழ்நிலை மாறியிருக்கும் நிலையில் இந்த சட்டம் அவசியம், இல்லை என நாம் கூறுகின்றோம்.

போர் நடவடிக்கைகளுக்கு அப்பால் இச் சட்டம் வேறுவிதமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பயன்படுத்திக் கைது சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதை நாம் அறிகின்றோம் எனவும் அவர் கூறினார். (ச-9)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வத்துரை பொன்னம்மா

### (பாரம்பரிய சித்த வைத்தியர்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பிரபல சித்த வைத்தியர் திருமதி செல்வத்துரை பொன்னம்மா 05.02.2010 அன்று காலமானார்.

அன்னார் மல்லாகம் பூத உடையார், சிதம்பர உடையார், கதிர்காம உடையார் வழிவந்த மயில்வாகனம் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும், சுழிபுரம் சித்தர் வழிவந்த பிரபல வைத்தியரும், முன்னாள் அதிபருமாகிய அமரர் செல்வத்துரையின் அன்பு மனைவியும், அமரர் பொன்னம்பலம், அமரர் வல்லிபுரம், அமரர் சுப்பிரமணியம் இராசம்மா, தனலட்சுமி, முத்துத்தம்பி (ஓய்வு பெற்ற இலிகிதர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசரத்தினம் (டென்மார்க்), சற்குணாம்பிகை (சித்த வைத்தியர்), பொன் குணரத்தினம் (இந்தியா), வரதரத்தினம் (சித்த வைத்தியர்-கொழும்பு), ஹிமாலயரத்தினம் (கனடா), கிருபாரத்தினம் (ஆயுள் வேத வைத்தியர்), பத்மாம்பிகை (ஆசிரியை கிளி/ முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிறேமா (டென்மார்க்), இராஜகுலேந்திரன் (இளவரசன் மருந்தகம், யாழ்ப்பாணம்), திலகவதி (ஆசிரிய ஆலோசகர்-கிளிநொச்சி கல்வித் திணைக்களம்), சாந்தினி (ஆசிரியை- கொழும்பு தமிழ் மகா வித்தியாலயம்), சிவலட்சுமி (கனடா), அகிலவல்லி (ஆசிரியை யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்), சிற்சபேசன் (கிளி/பரந்தன் மகாவித்தியாலயம்-ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மூர்த்திரத்தினம், குணரத்தினம், கஜரத்தினம், ஹரன், றோசினி, பசுந்தமிழன், இன்னிசைத்தமிழன், டிசாரத்தினம், தசரத்தினம், மகிழா, துரைரத்தினம் (துவாரகன்), தேவரத்தினம் (தேசிகன்), கோபிரத்தினம் (கோபிகன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.02.2010 (ஞாயிற்றுக்கிழமை) இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் காலை 9.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:-

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(577)

## இராணுவப் புரட்சி அச்சமே...

தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவப் புரட்சி ஒன்றை மேற்கொள்ளலாம் என அரசு அச்சமடைந்துள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

1970களில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான மோதல்கள் உருவாகிய பின்னர் கொண்டுவரப்பட்ட அவசர காலச் சட்டம் ஒவ்வொரு மாதமும் நீடிக்கப்படுவது உண்டு.

தமிழ்க் கட்சிகள் அதனை எதிர்த்து வருகின்றன. விடுதலைப் புலிகளை முறியடித்துள்ளதாக அரசு தெரிவித்து வரும் நிலையில் இந்தச் சட்டம் தேவையற்றது என பல தரப்பிலிருந்தும் கருத்துக்கள் எழுந்துள்ள போதும் நாட்டில் இராணுவப் புரட்சி ஏற்பட மேற்குலக சக்திகளின் துணையுடன் விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என அரசு தெரிவித்து வருகின்றது.

இராணுவத்தில் சேவையில் உள்ள பல இராணுவ உயரதிகாரிகளும் ஓய்வு பெற்ற அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் பலர் இராணுவத்தை விட்டு நீக்கப்பட்டுள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தேர்த...

தலைமையில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தி வருகின்றனர். பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதனையே அதிகமான உறுப்பினர்கள் விரும்புவதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## சி.சு. கட்சியில்...

இணைந்து கொள்ளவுள்ளதாக வெளியான வதந்திகளில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாமும் தமது ஆதரவாளர்களும் தொடர்ந்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தபோதிலும் கட்சியை விட்டு விலகவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுன ரணதுங்காவைப் போன்று தாமும் கட்சியை விட்டு விலகாது ஆதரவளித்ததாக அவர் தெரிவித்துள்ளார். (ச-3,5)

## பொதுத் தேர்த...

குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனை ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா தேர்தல் முடிபுகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எங்களது சார்பில் சாட்சிக்காக ஆஜர்ப்படுத்தவுள்ளோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் போன்றே ரணில் விக்கிரமசிங்கவும் ஓர் வெற்றியாளராகக் கருதப்பட வேண்டும். ஜெனரல் சரத் பொன்சேகாவின் தோல்வியின் மூலம் ரணிலின் அரசியல் பயணம் தொடர வழிகோலியுள்ளது.

ஜனாதிபதி வெற்றி பெற வேண்டும் என்பது ரணில் விக்கிரமசிங்கவின் இரகசிய எதிர்பார்ப்பாக அமைந்தது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஒரு சில ஊடகங்கள் மட்டுமே பக்கசார்பின்றி செயற்பட்டன.

போலியான பிரசாரங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அதன் மூலம் அரசியல் இலாபம் ஈட்டஎந்தவொரு எதிர்க்கட்சியும் முனைப்புக் காட்டக் கூடாது என அவர் குறிப்பிட்டார். (ச-5)


# UNIVERSITY OF CAMBRIDGE
# ENGLISH COURSES

## உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பரீட்சைகள்

- உலகத்தில் எப்பாகத்திலும் நல்லதொரு தொழிலைத் தேடிப் பெற்றுக்கொள்ள, பூரணமான ஆங்கில அறிவைப் பெற
- உலகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டிய தகைமையைப் பெற.

UNIVERSITY of CAMBRIDGE இன் பின்வரும் ஆங்கிலப் பாடநெறியில் இன்றே சேர்ந்து கொள்ளுங்கள்.

## CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH (FCE)

- இது ஒரு மிகவும் உயர்ந்த ஆங்கிலப் பாடநெறி, உலகின் பெரும் பாலான பல்கலைக் கழகங்கள் ஆங்கில தகுதிக்கு IELTS இற்குப் பதிலாக FCE ஐ ஏற்றுக்கொள்கின்றன. எந்த நேரத்திலும் உங்கள் ஆங்கிலத் தேவையைப் பூர்த்திசெய்யும் தலை சிறந்த சான்றிதழ்.
- BRITISHCOLLEGE OF ENGLISH இல் FCE வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை ஆகிய தினங்களில் நடைபெறும். பரீட்சை யூன் மாதம் கொழும்பில் நடைபெற்று மூன்று மாதங்களில் சான்றிதழ் LONDON இலிருந்து கிடைக்கப் பெறுவீர்கள்.
- Each examination covers the four main language skills: Listening, Speaking, Reading and Writing, Speaking & Use of English பரீட்சையின் போது பரீட்சார்த்தி 30 நிமிடங்கட்கு ஆங்கிலேயர்களுடன் சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டும்.
- பெரும்பாலான UK இல் உள்ள பல்கலைக்கழகங்கள் IEITS ப் பதிலாக இப்பரீட்சையை அங்கீகரிக்கின்றன.

| | |
|---|---|
| Duration | 4 Months |
| Time | Monday to Friday 10.30 - 12.30 pm |
| Commencement | 15th February 2010 |
| Register Before | 15th February 2010 |

**வகுப்புக்கள் 15.02.2010 இல் ஆரம்பம்.**

**BRITISH COLLEGE OF ENGLISH**

143, Adiyapatham Road, Thirunelvely.

T.P: 0213216027 - 0778803887



# கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகம்

## சனசமூக நிலையம்

**விக்ரம்-ராஜன்-கங்கு கிரிக்கெட் போட்டி-2010**

**இறுதிப்போட்டி**

யாழ். பல்கலைக்கழகம் எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம்

முதன்மை விருந்தினர்

**திரு.என்.நாகேஸ்வரன்** (முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகக் கிளை)

சிறப்பு விருந்தினர்

**திரு.கே.கணேசநாதன்** (பணிப்பாளர், பௌதிகக் கல்வி, யாழ். பல்கலைக்கழகம்)

இடம்: யாழ். பல்கலைக்கழக மைதானம்
நாள்: 07.02.2010 ஞாயிறுக்கிழமை
நேரம்: மு.ப.9.00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(578)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.